வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 13.03.2024 புதன்கிழமை இதழ் : 73 பக்கங்கள் : 12

## யாழ்ப்பாணம் - சென்னை

# மற்றொரு விமான சேவை ஜூன் மாதம் ஆரம்பமாகும்!

யாழ்ப்பாணம், மார்ச் 13


**இந்தியாவின் முன்னணி விமான சேவை நிறுவனமான இண்டிகோ எயார் லைன்ஸ் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் யாழ்ப்பாணம் - சென்னை இடையே விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளது.**



இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் கண்காணிப்பதற்காக அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

முன்னதாக, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் தூதுவராக செயல்பட்ட ராகேஷ் நட்ராஜ் இந்த ஆண்டில் யாழ்ப்பாணம் - சென்னை இடையே மற்றொரு விமான சேவை தொடங்கப்படும் என்று தனது பிரிவுபசார நிகழ்வில் வைத்துத் தெரிவித்திருந்தமை நினைவுகூரத்தக்கது.

(ஐ)



## வடக்கு பிரதம செயலராக இளங்கோவன் நியமனம்!

கொழும்பு, மார்ச் 13

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக எல். இளங்கோவன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார்.

இளங்கோவன் ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராக பணியாற்றி வந்த நிலையில் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

11

## பெறாமகளை வன்புணர்ந்த நபருக்கு 12 ஆண்டு கடூழியம்!

### கிளிநொச்சி நீதிமன்றம் விதித்தது

கிளிநொச்சி, மார்ச் 13

சிறுமியான தனது பெறாமகளை வன்புணர்ந்த சிறியதந்தைக்கு 12 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்தது கிளிநொச்சி மேல் நீதிமன்றம்.

கடந்த 2011ஆம் ஆண்டு பளை பகுதியில் இடம்பெற்ற இந்த பாலியல் வன்புணர்வு சம்பவம் தொடர்பான வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றில் நீதிபதி ஏ. எம். எம். சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, குற்றவாளிக்கு 12 ஆண்டுகள்

11

## ஓ பொசிற்றிவ் குருதி வகைக்கு தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் “ஓ பொசிற்றிவ்“ (O+) இரத்த வகைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, குருதி கொடையாளர்கள் யாழ்ப்பாணம் இரத்த வங்கிக்கு (யாழ். போதனா மருத்துவமனையில் உள்ளது) நேரில் வருகை தந்து குருதிக் கொடை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில்

11

## இளம் குடும்பஸ்தரை கடத்தி வெட்டிக் கொன்றது கும்பல்!

### வட்டுக்கோட்டையில் பயங்கரம்

- சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் கைது
- அபயம் கேட்டவரை விரட்டியது கடற்படை

யாழ்ப்பாணம், மார்ச் 13

வீதியில் சென்ற இளம் குடும்பஸ்தரை கும்பல் ஒன்று கடத்திச் சென்று வெட்டிக் கொன்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் அராலியை சேர்ந்த நால்வரை கிளிநொச்சியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை - மாவடிப் பகுதியை சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் (வயது 23) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் நேற்று முன்தினம் இரவு காரைநகரில் இருந்து வட்டுக்கோட்டை - மாவடியில் உள்ள வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தவேளை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில் இரண்டு கார்களில்

11

## வெடுக்குநாறிமலை விவகாரம் விசாரிக்கக் குழு அமையுங்கள்!

### ஜனாதிபதியிடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 13

வெடுக்குநாறிமலையில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழு அமைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், வெடுக்குநாறிமலை சம்பவம் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து தேசிய நல்லிணக்கத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலான செயல்பாடுகள் எதிர்காலத்தில்

11

## தென்னிலங்கையில் 6 பேர் சுட்டுக்கொலை!

### நேற்றும் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மார்ச் 13

தென்னிலங்கையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 6 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

இதனிடையே, நேற்றைய தினமும் கொழும்பு - மட்டக்குளியில் துப்பாக்கிச்சூட்டு சம்பவம்

11

## யாழில் துப்பாக்கிசூடு இளைஞர் படுகாயம்!

தென்மராட்சி, மார்ச் 12

மணல் வியாபாரத்தில் ஈடுபட்ட உறவினர்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

தென்மராட்சி - எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இதே இடத்தை சேர்ந்த சிவயோகநாதன் தனுசன் (வயது -29) என்பவரே

11

## வெடுக்குநாறியில் கைதான எண்மருக்கும் விளக்கமறியல்

வவுனியா, மார்ச் 13

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய “பூசகர் உட்பட கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை மீளவும் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எண்மரும் நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் நடந்த வழக்கு விசாரணையில் முற்படுத்தப்பட்டனர்.

நேற்று காலை 9 மணி இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. தொல்பொருள்

11

## ஐ. எம். எவ். பிரதிநிதிகளை சந்திக்கின்றது சஜித் தரப்பு

கொழும்பு, மார்ச் 13

அடுத்த சில நாட்களில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை ஐக்கிய மக்கள் சக்தி சந்திக்கவுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளது. 2022 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 5 - 18

11

### அதிகரிக்கும் வெப்பநிலை

## சிறுவர்கள் தொடர்பில் விழிப்பாக இருங்கள்!

கொழும்பு, மார்ச் 13

முற்பகல் 11 மணிக்கு பின்னர் சிறுவர்களை வெளியக செயல்கள் எவற்றிலும் ஈடுபடுத்த வேண்டாம் என்று மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அல்லது சம்பந்தர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் முதலில் வைத்து எண்ணப்படும் நால்வருள் ஒருவர்.

ஏழாம் நூற்றாண்டில், அப்போதைய சோழ நாட்டில் சீர்காழி என்னும் ஊரில் பிறந்தவர். இவர் மூன்று வயது குழந்தையாக இருந்தபோது தந்தையாருடன் கோயிலுக்குச் சென்றாரென வும் அங்கே குழந்தையைக் கரையில் அமரவைத்து குளிக்கச் சென்ற தந்தையார், சிறிது நேரம் நீருள் மூழ்கியிருந்த சமயம் தந்தையைக் காணாத குழந்தை, “அம்மா... அப்பா...”, என்று கூவி அழுததாகவும் அப்போது உமாதேவியார் சிவபெருமானுடன் இவர் முன் காட்சி கொடுத்து ஞானப்பால் ஊட்டினார். அதனைப் பருகிய குழந்தை சிவஞானத்தைப் பெற்றது. நீராடி முடித்து விட்டு வந்த தந்தை வாயில் இருந்து பால் வடிவதைக் கண்டார். அது பற்றி வினவியபோது குழந்தை கோயிலைச் சுட்டிக்காட்டித் “தோடுடைய செவியன்...” என்று தொடங்கும் தேவாரத்தைப் பாடியது என்றும் சொல்லப்படுகிறது.

அந்தத் தேவாரத்தை தெரியாத சைவர்கள் இருக்கமாட்டார்கள். அத்தகைய சிறப்பைக் கொண்ட சம்பந்தர் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய சிவாலயங்களைப் பற்றியும் பதிகங்களைப் பாடியுள்ளார்.

அவர் பாடிய திருக்கோணேச்சர பதிகத்தில் முதல் தேவாரத்தில், ‘சந்தனக் கட்டைகளும் கரிய அகில் கட்டைகளும் மாணிக்கக் கற்களும் அளவினிக் கரையில் சேர, ஒலிக்கின்ற கடலின் அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் திருகோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.’ என்று திருகோணமலையின் சிறப்புகளை சம்பந்தர் வர்ணித்திருப்பார்.

அத்தகைய சிறப்புகளைப் பெற்ற திருகோணமலைகேணேச்சர ஆலயம் இன்று பௌத்த மயமாக்கலுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கின்றது.

இதனைத் தடுக்க, திருகோணமலையில் பல தசாப்தங்களாக எம். பியாக இருக்கும் இரா. சம்பந்தன் ஐயா என்ன செய்தார் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்தது. சில வருடங்களில் தனது பன்முகப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியிருக்கலாம். ஆனால், அந்த ஆலய சுற்றாடலை ஆக்கிரமித்து வரும் பௌத்த சின்னங்களைத் தடுக்கவோ, அல்லது சுற்றுலா அபிவிருத்தி என்ற பெயரில் அதன் புனிதத்தை சிதைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளையோ தடுக்க முயன்றாரா என்பது தெரியவில்லை.

ஆனால், அந்த ஆலயத்தைப் பாதுகாக்க என்ன வழிகளை பயன்படுத்தலாம் என்று சிந்தித்து, அதன் அபிவிருத்தி என்ற பெயரில் இந்திய உதவியைப் பெறுவதன் மூலம் அதன் புனிதத்தை காப்பாற்றலாம் என்று கணக்கிட்டு செயலாற்றியவர் நமது ஆறு. திருமுருகனார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் இலங்கை விஜயத்தின்போது அங்கு அவர் விஜயம் செய்வதையறிந்து - அங்கு சென்று அவரைச் சந்தித்து கோரிக்கை மனுவை கொடுத்தவர் அவர்.

அந்த ஆலயத்தின் அபிவிருத்தியில் இந்தியாவை சம்பந்தப்படுவது அதன் புனிதத்தைக் காப்பாற்ற உதவும் என்ற அவரின் தூரநோக்கு பாராட்டுக்குரியது.

அவரோடு அண்மையில் பல்வேறு விடயங்களையும் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்ன தகவலை இந்தப் பத்தியில் பகிரவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

பாரத பிரதமர் மோடி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருந்த சமயத்தில் அவர் எந்த ஆலயத்துக்கு செல்லலாம் என்று திருமுருகனாரிடம் யோசனை கேட்கப்பட்டதாம். குண்டு துளைக்காத ஆடைகளை அணிந்திருக்க வேண்டிய கட்டாயத்திலுள்ள பாரதப் பிரதமர் மேலங்கி இல்லாமல் எங்கும் செல்ல பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதிக்கப்போவதில்லை. நல்லூர் ஆலயத்தினுள் மேலங்கியுடன் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் அவர்கள் அங்கு செல்ல வேண்டும் என்றும் கருதவில்லை.

எந்தக் கோவில் என்பதை தெரிவுசெய்த ஆறு. திருமுருகனார் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைத் தெரிவுசெய்து அனுப்பினார். அங்கு அவர் விஜயம் செய்தால் அதனை அண்டிய பகுதிகள் இப்போதும் இலங்கை இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவல்களையும் அவருக்கு சொல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்பது அவரின் எண்ணமாக இருந்திருக்க வேண்டும்.

திருமுருகனார் கீரிமலையை தெரிவு செய்ததும், கொழும்பு இந்திய தூதரகத்திலிருந்து அவரிடம், அந்தக் கோவிலின் சிறப்பு என்ன என்று கேட்கப்பட்டபோது அவர் தெரிவித்த அந்தத் தகவல் இந்த ஊர்க்குருவிக்கும் புதியது.

மகாத்மா காந்தியடிகள், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது கீரிமலை நகுலேஸ்வரத்துக்கும் விஜயம் செய்திருந்தார். அங்கு வந்து சென்ற அவர், தான் இறந்த பின்னர் தனது அஸ்தியை கீரிமலை புனித தீர்த்தத்திலும் கரைக்கவேண்டும் என்ற தனது விருப்பத்தை முன்னதாகவே எழுதி வைத்திருந்ததால் அவர் இறந்த பின்னர் அவரின் அஸ்தி கீரிமலைக்கும் எடுத்து வரப்பட்டு அங்கு கரைக்கப்பட்டது என்ற செய்தியை திருமுருகனார் தெரிவிக்க பிரதமர் மோடியோ தான் அங்கு போக வேண்டும் என்று கண்டிப்புடன் சொல்லியதுடன், அந்த விஜயத்தின்போது அங்கும் சென்றிருந்தார்.

பாரதப் பிரதமர் யாழ்ப்பாணம் வருகின்றபோது அந்த விஜயத்தில் தனக்கும் முக்கியத்துவம் தரவேண்டும் என்று ‘போராடி’ பெற்ற நமது வடக்கு முதல்வர்தான் அப்போது ஞாபகத்தில் வந்தார்.

ஒரு சைவ சமயத் தலைவராக தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எத்தகைய இராஜதந்திரத்தோடு ஆறு. திருமுருகனார் பயன்படுத்தினார் என்பதை நினைக்கின்றபோது நமது மக்கள் பிரதிநிதிகள் அவரிடம் பாடம் கற்கவேண்டும் என்று எழுதாமல் இருக்கமுடியவில்லை!

- ஊர்க்குருவி.

# ‘யுக்திய’ நடவடிக்கையில் ஆயிரத்து 101 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 13

நாடளாவிய ரீதியில் நேற்று காலை 6 மணி வரையான 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையில் ஆயிரத்து 101 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் ஆயிரத்து 30 சந்தேக நபர்களும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் 71 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆயிரத்து 30 சந்தேகநபர்களில் 46 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட 17 பேரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட பணியகம் ஆகியவற்றின் பட்டியலில் இருந்த 43 சந்தேக நபர்கள் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 71 சந்தேக நபர்களில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 5 பேரும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 63 பேரும் உள்ளடங்குவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மருத்துவமனைமீதான வழக்கு; மேலதிக நடவடிக்கைக்கு தடை!

கொழும்பு, மார்ச் 13

கொழும்பில் உள்ள பிரதான தனியார் மருத்துவமனையின் பணிப்பாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை மாளிகாகந்தை நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

கொழும்பில் உள்ள பிரதான தனியார் மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளர்களுக்கு அழைப்பாணை வழங்கப்படுவதை தடுக்கும் வகையில் உத்தரவுக்கு பிறப்பிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மாளிகாகந்தை பிரதான நீதிவான் இந்த அறிவித்தலை வழங்கினார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தம்மித கணேபொல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஐ)

## குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், மார்ச் 13

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த சிறப்பு சொற்பொழிவு தொடர் -49 (அப்பூதியடிகள் நாயனார்) நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் “திருநாவுக்கரசர்மீது பற்றுக் கொண்ட நாயனார்“ என்னும் விடயப் பொருளில் இளம் சைவப் புலவர் க. கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

## தமிழக பேச்சாளரின் இன்றைய உரைகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

தமிழ்நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பிரபல செயலூக்க பேச்சாளர் சரண்யா ஜெயக்குமார் இன்று புதன்கிழமை தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரியில் உரையாற்றவுள்ளார்.

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் முற்பகல் 10 மணிக்கு ‘வெற்றிப் பாதை’ என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இதைத் தொடர்ந்து இன்று மதியம் 1.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் ‘தோல்விகளும் பாடங்களே’ என்ற தலைப்பில் உரையாற்றுவார். (ஐ)

### சைபர் குற்றம், செயற்கை நுண்ணறிவு:

# 20 பொலிஸாருக்கு இந்தியாவில் பயிற்சி!

கொழும்பு, மார்ச் 13

சைபர் குற்ற விசாரணை மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான விசேட பாடநெறிக்காக இலங்கை பொலிஸ் அதிகாரிகள் 20 பேர் கொண்ட குழு இந்தியா சென்றுள்ளது.

அவர்கள் இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள மத்திய துப்பறியும் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுவார்கள்.

இந்தக் குழுவினர் கடந்த 3ஆம் திகதி இந்தியா சென்றனரென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவில் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், 2 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 17 பொலிஸ் பரிசோதகர்கள் அடங்குவர். பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இந்தக் குழுவினர் இந்தியா சென்றுள்ளனர். இவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை நாடு திரும்பவுள்ளனர். (ஐ)

# சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

நீர்வேலி வடக்கு அருள்மிகு காளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 06.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. இதில், சைவப்புலவர்கள் செ. த. குமரன் , பொன். சந்திரவேல், அவர்களும் இளம் சைவப்புலவர்கள் க. கைலநாதன், ச. நவநீதன், க. கயிலைவாசன் ஆகியோரின் சொற்பொழிவாற்றுவர். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், மார்ச் 13

சிறுப்பிட்டி வடக்கு - மாதியந்தனை - இலுப்பையடி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார திருவிழாவை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.30 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இதில், சைவப்புலவர்கள் ஏ. அனுசாந்தன், செ. த. குமரன் , பொன். சந்திரவேல் அவர்களும், இளம் சைவப்புலவர்கள் க. கைலநாதன், ச. நவநீதன், நித்திய பாபுதரன், க. கயிலைவாசன், ஆகியோர் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.03.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மாசி 30

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்து மக்களின் பிரச்னை

இந்துக் கோயில்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் கேள்விகள் எழுந்திருக்கின்றன. எண்பது கோடி இந்து மக்களை கொண்டிருக்கும் இந்தியாவுக்கு அருகில் வாழும் ஈழத் தமிழ் இந்து மக்கள் தங்களுடைய தனித்துவமான மத இருப்பு தொடர்பில் அச்சம் வெளியிடும் நிலைமை ஏற்பட்டிருப்பது ஆரோக்கியமான ஒன்றல்ல. வெடுக்கு நாறிமலை விவகாரம் மீண்டும் இந்துக் கோவில்கள் தொடர்பிலான கரிசனையை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் இந்து தமிழ் மக்களே பெரும்பான்மையினராவர் ஆனால், அவர்கள் அதிகாரமற்ற மக்களாக இருக்கின்றனர்.

இந்து ஆலயங்கள் தொடர்பான பிரச்னைகள் வெளிக்கொண்டு வரப்படும்போது இந்துத் தலைவர்களும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்துவரும் அரசியல் தலைமைகளும் குறித்த விடயத்தை நிதானமாகவும் தூரநோக்குடனும் கையாள வேண்டும். இதனை வடக்கு - கிழக்குக்கான பிரச்னையாக சுருக்குவதை முதலில் கைவிட வேண்டும். இவ்வாறான பிரச்னைகள் ஏற்படுகின்றபோது, இதனை ஓர் இலங்கை தழுவிய பிரச்னையாக அடையாளப்படுத்த வேண்டும். இது தொடர்பில் நாம் முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றோம். அதாவது, இவ்வாறான பிரச்னைகளின்போது அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து குரல் கொடுக்கும் பிரச்னையாக இதனை மாற்ற வேண்டும்.

அரசாங்கத்தோடு இருக்கும் தமிழ்க் கட்சிகளும் இந்தப் பிரச்னையில் இணைய வேண்டும். அதேபோன்று, மலையகக் கட்சிகள் மற்றும் தேசிய கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் இந்துக்களாக இணைய வேண்டும். வடக்கு - கிழக்கில் இவ்வாறான பிரச்னைகள் இடம்பெறும்போது இதனை ஒரு தமிழ்த் தேசிய விவகாரமாக சுருக்கக்கூடாது.

ஆனால், அவ்வாறான குறுகிய அணுகுமுறையில்தான் இந்த விடயம் இதுவரையில் அணுகப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் வடக்கு - கிழக்கில் செயல்படும் ஆதீனங்கள் இந்து மத ஸ்தாபனங்களின் தலைவர்கள் அனைவரும் இந்த விடயத்தை இலங்கை இந்துக்களின் பிரச்னையாக முன்வைக்க வேண்டும். அனைவரின் ஆதரவையும் ஒன்றிணைக்கும்போதுதான் அதிகாரமற்ற தரப்பாக இருக்கும் இந்து மத ஸ்தாபனங்கள் பலமான நிலையில் தங்களின் குரலை முன்வைக்க முடியும். அவ்வாறானதொரு சூழலில்தான் அரசாங்கமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தும்.

வடக்கு - கிழக்கில் பௌத்த ஆலயங்கள் தொடர்பான சர்ச்சை அவ்வப்போது எழுகின்றது. ஆனால், கத்தோலிக்க மத ஆலயங்கள் இருக்கின்ற இடத்திலோ அல்லது இஸ்லாமிய மதத் தலங்கள் உள்ள இடங்களின் அடிப்படையிலோ இவ்வாறான சர்ச்சைகள் எழுவதில்லை. இது தொடர்பில் இந்து மதத் தலைவர்கள் மத்தியில் கவலைகள் காணப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் எங்கெல்லாம் பாரம்பரிய சிவன் ஆலயங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பௌத்த ஆலயங்கள் தொடர்பான சர்ச்சைகள் எழுகின்றன. இது அடிப் படையில் இந்து மதத்துக்கும் பௌத்தத்துக்கும் உள்ள பிணைப்பு தொடர்பானது. ஆரம்ப காலங்களில், வடக்கு - கிழக்கில் பௌத்தம் தமிழ் மக்களாலும் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. அவ்வாறான இடங்கள் அனைத்தும் தங்களுக்கு சொந்தமானது என்பதிலிருந்தே இவ்வாறான பிரச்னைகள் எழுகின்றன. இந்த விடயங்கள் உரிய வகையில் சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிரச்னையை கையாள முடியாது.

# கவிநாயகர் கந்தவனம்

**கனடா தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவரும் புகழ்பெற்ற கவிஞருமான வி. கந்தவனம் அவர்களின் மறைவையொட்டி இந்தக் கட்டுரை பிரசுமாகிறது.**



*கவிநாயகர் வி. கந்தவனம் மார்ச் 11ஆம் நாள் திங்கட்கிழமை ரொறன்ரோவில் காலமானார். 28.10.1933 ல் நுணாவிலில் பிறந்தார். விநாயகர் சின்னம்மா அவரின் பெற்றோர்.*

*பசுபதியும் மார்க்கண்டும் அண்ணன் மார். கணபதிப்பிள்ளை இளையவர். 20.08.1964ல் குரும்பசிட்டிவாசியானார். தவமணி அன்பு நிறை மனைவி. வாணியும் வாரணனனும் பண்பான பிள்ளைகள். ருத்திராவும் துஷித்தாவும் மருமக்கள்.*

*நுணாவில் கணேச வித்தியாசாலை சாவகச்சேரி றிபேக் கல்லூரி சென்னை கிறிஸ்தவ கல்லூரி கோவை கலைக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாணவன். சென்னை பல்கலைக்கழக பட்டதாரி. மாத்தளை புனித தோமையர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் ஆசிரியர். அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர். தென்னாபிரிக்கா புனித கத்பேட்ஸ் உயர் கல்லூரி யில மானிடவியல் துறைத் தலைவர்.*

*கனடா தேசிய கீதத்தை அழகாகத் தமிழாக்கம் செய்தவர் எங்கள் கவிநாயகர் கந்தவனம். அவரது இனிய தமிழ் வார்த்தைகளின் அணிவகுப்பை ஏற்றே தேசியக் கொடி கடந்த 25 வருடங்களாக மதிப்புடன் வானில் பறப்பது ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்துக்கும் பெருமையாகும்.*

*புலன்களைப் பூப்பூக்க வைக்கும் கவிஞர். உணர்வுகளுடன் உறவாடி அவற்றை உச்சத்துக்கு ஏற்றி வைக்கும் கட்டுரையாளர். இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களையும் இதயத்தின் சந்தோஷமான பரப்புகளுக்கு அனுப்பி வைக்கும் அதீத ஆற்றல் பெற்ற இனிமையான எழுத்தாளர்.*

*மேடைகளுக்கு கம்பீரத்தையூட்டி சபையோருக்கு கௌரவம் சேர்க்கும் சுவாரசியமான பேச்சாளர். உயர்ந்த உள்ளம் கொண்ட உத்தமர். வசீகரம் மிக்க இந்த அடையாளங்களைத் தனதாகக் கொண்டிருந்தவர் பாவரசர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் என்பதை காழ்புணர்வு இல்லாத ஒவ்வொரு தமிழனும் உளப்பூர்வமாக ஒத்துக் கொள்வான்.*

*தமிழால் தானும் வாழ்ந்து தன் வாழ்வால் தமிழையும் வாழ வைத்த இனிய தமிழர் அவர். அவரது இதயம் - இலக்கியத்திடமிருந்தது. அதனால் என்றும் இளமையோடிருந்தது. அவரது இலக்கியத்திடம் - இதயம் இருந்தது. அதனால் இன்றும் துடிப்புடன் மிளிர்கின்றது.*

*அறிவால்....ஆற்றலால்...அனுபவத்தால் அவர் முதியவர்.*
*இலகுவாய்...இனிமையாய்.....இதயத்தால் எழுதுவதில் அவர் இளையவர்.*

*1954ஆம் ஆண்டு அவரது முதலாவது குறுநாவலான ஒன்றரை ரூபாய் வெளிவந்த உடனேயே தமிழ் இலக்கிய உலகம் அவரது பெயருக்கு அடிக்கோடு இட்டுக் கொண்டது. இதுவரை 80 நூல்களைத் தந்துள்ளார் என்னும் பொழுது விரியும் கண்கள் இன்னும் 45 ஆவது வெளிவரக்கூடும் என்பதை அறிந்தால் மேலும் அகல விரியும்.*

*தமிழ் இலக்கியவாதி ஒருவருக்கு முதலாவது மணிவிழாவாகவும் அதுவே முதன்மையான விழாவாகவும் கனடிய மண்ணில் அவரது மணிவிழா 1993இல் அமைந்தது.*

*முதன்மையான அந்த இனிய தமிழரின் சிறப்பான சரிதை கனடாவில் வெளிவந்த் முதலாவது வரலாறு கூறிய தமிழ் நூல் என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றது. ஆசிரியராய் அதிபராய் அவர் வாழ்ந்த வாழ்வு மனிதத்துக்கு மதிப்பெண் போடக் கற்றுக் கொடுத்தது.*

*நடிகராய் இயக்குநராய் நாடகப்போதனாசிரியராய் அவர் தாங்கிய வேஷம் சமுகத்துக்கு அரிதாரம் பூசுவோரை அம்பலப் படுத்தி அவர்களின் இதயத்தின் உட்டே தாலைக்கூட உரிக்க வைத்துச் சீர்திருத்தம் செய்தது.*

*கவியரங்கங்கள் கருத்தரங்கங்கள் பட்டி மன்றங்கள் சமயச் சொற்பொழிவுகள் என்பன உரைகளால் உலகை உரசலாம் என உணரவைத்து மனிதரில் இறந்து கிடந்த மனிதத்தை எழுப்ப வைத்தது.*


*இதயங்களை இலக்கு வைத்தே அவரது இலக்கியப் பணி அமைந்தது. அதனால் இலக்கியக் களங்களெல்லாம் அவரின் பெயரை உற்சாகமுடன் உச்சரித்தன - பிரியமுடன் பிரசுரித்தன. கவிதை என்பது அவரது வாழ்வின் முகவரி!*

*அமரரின் இறுதிக்கிரியையும் ஈமச்சடங்கும் வார இறுதியில் ரொறன்ரோவில் நிகழும்.*

*கண்ணீர் பூக்கள் கொண்டு இதயம் அஞ்சலிக்கின்றது!*

**- எஸ்.ஜெகதீசன்**

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 12 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 29
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திரிதியை




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. திடீர்பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

**இடபம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். லாபம் பெரும்நாள்.

**மிதுனம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நன்மை நடக்கும்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கன்னி**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப்பகிர்ந்துக் கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். அதிருப்தியான சூழ்நிலை உருவாகும். நிதானம் தேவைப்படும் நாள்.

# முருகன், றொபேர்ட், ஜெயக்குமார் துணைத்தூதரகம் செல்ல ஏற்பாடு!

## நீதிமன்றில் அறிவித்தது தமிழக அரசு

*சென்னை, மார்ச் 13*

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் கடவுச்சீட்டு பெறுவதற்கான நேர்காணலில் பங்கேற்க இலங்கை துணைத் தூதரகத்துக்கு இன்று புதன்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்த மனுவில், திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது கணவர் முருகனுக்கு ஏதும் நடக்க முன்னர் லண்டனில் வசிக்கும் எங்கள் மகளுடன் சேர்ந்து வசிக்க விரும்புகிறோம். இதற்காக அனைத்து நாடுகளுக்கும் செல்லக்கூடிய வகையில் அவருக்கு கடவுச் சீட்டை பெறுவதற்காக சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தில் நேர்காணலில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும். தேவையேற்படின் அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் - என்றும் கோரியிருந்தார்.

இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, முருகன் கடவுச்சீட்டு பெறுவதற்கான நேர்காணலில் பங்கேற்க இலங்கை துணை தூதரகத்திடம் முன் அனுமதி பெற திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு இரு நீதிபதிகள் கொண்ட அமர்வில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது, பொலிஸ் வாதாடிய கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர், முருகனின் நேர்காணலுக்காக புதன்கிழமை அனுமதி பெறப்பட்டுள்ளது. முருகனை தவிர, முகாமில் இருக்கும் றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரும் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக அழைத்துச் செல்ல கோரிக்கை வைத்தனர். எனவே, நாளை (இன்று) அவர்களும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தயாராக உள்ளன.

நாளை (இன்று) அதிகாலை 5 மணிக்கு திருச்சி முகாமில் இருந்து புறப்பட்டு 11.30 மணியளவில் சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர், என்று தெரிவித்தார். இதனை பதிவு செய்தநீதிபதிகள், நளினி தொடர்ந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர். (ஐ)

# குடியுரிமை திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் அமுலாகாது

## முதலமைச்சர் ஸ்டாலின் உறுதி

## * ஈழத் தமிழர்களுக்கும் பாதிப்பு

*சென்னை, மார்ச் 13*

“ஒன்றிய அரசு நிறைவேற்றியிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றிட தமிழ்நாடு அரசு எவ்வகையிலும் இடமளிக்காது; இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு சட்டத்துக்கும் தமிழ்நாடு அரசு இடம் கொடுக்காது” என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், “பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய இறுதி நாட்களில் ஒன்றிய பா. ஜ. க. அரசு இருந்துவரும் வேளையில், பல்வேறு தரப்பு மக்களாலும் எதிர்க்கப்பட்ட, குடியுரிமை திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்திட அவசர கதியில் நேற்று அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது இந்திய அரசமைப்பு சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு முற்றிலும் எதிரானது மட்டுமல்ல, பலவகையான மொழி, இன, மதம் மற்றும் வாழ்விட சூழல் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும், ஒன்றுபட்ட உணர்வுடன் வாழ்ந்து வரும் இந்திய மக்களின் நலனுக்கும், இந்திய தாய்த் திருநாட்டின் பன்முகத் தன்மைக்கும், மதச் சார்பற்ற தன்மைக்கும் முற்றிலும் எதிரானதாகும். அதுமட்டுமல்ல் சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் முகாம்வாழ் (இலங்கை) தமிழர்களின் நலனுக்கும் எதிரானதுதான் இந்தச் சட்டம்.

எனவே, ஒன்றிய அரசு நிறைவேற்றியிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றிட தமிழ்நாடு அரசு எவ்வகையிலும் இடமளிக்காது இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு சட்டத்துக்கம் தமிழ்நாடு அரசு இடம் கொடுக்காது என்பதனை தமிழ்நாட்டு மக்களுக்கு நான் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்” - என்றார்.

முன்னதாக, சி. ஏ. ஏ. எனப்படும் குடியுரிமை திருத்தசட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உடனடியாக நடைமுறைக்கு வந்தது. இது தொடர்பான அறிவிப்பாணையை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பா. ஜ. கவுடன் பேசவில்லை!

## தே. மு. தி. க. அறிவிப்பு

*சென்னை, மார்ச் 13*

பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. - தே. மு. தி. க. கூட்டணி உறுதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக, அ. தி. மு. க. சார்பில் முன்னாள் அமைச்சர்கள் எஸ். பி. வேலுமணி, பி. தங்கமணி உள்ளிட்ட குழுவினர், தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதாவை சந்தித்து தொடர்ந்து பேசி வந்தனர்.

இதனிடையே, பா. ஜ. கவும் தே. மு. தி. கவுடன் கூட்டணி அமைக்க பேச்சு நடத்தியதாகத் தகவல் வெளியானது.

ஆனால், பா. ஜ. கவுடன் கூட்டணி பேச்சு நடைபெறவில்லை என்று பிரேமலதா உறுதியாக தெரிவித்துள்ளார். (ஐ)

# பா. ஜ. கவில் கட்சியை இணைத்தார் சரத்குமார்!

*சென்னை, மார்ச் 13*

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை அதன் நிறுவுநர் சரத்குமார் நேற்று பா. ஜ. கவில் இணைத்தார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைமை பணிமனையில் அந்தக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை முன்னிலையில் சரத்குமார் தனது கட்சியை பா. ஜ. கவுடன் இணைத்தார்.

பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் வேளையில் சரத்குமார் பா. ஜ. கவுடன் தனது கட்சியை இணைத்துள்ளது அரசியல் களத்தில் பேசுபொருளாகியுள்ளது.

இணைப்புக்குப் பின்னர் பேசிய சரத்குமார், “பா. ஜ. கவில் இணைந்தது சமத்துவ மக்கள் கட்சியின் முடிவு அல்ல. மாறாக மக்கள் பணிக்கான தொடக்கம்”, என்றார்.

முன்னதாக பேசிய அண்ணாமலை, “சரத்குமார் தேசியத்துக்கு தேவைப்படுகிறார். அவரை சிறிய வட்டத்துக்குள் அடைத்து வைக்கக்கூடாது” - என்றார்.

சரத்குமார் தனது அரசியல் பயணத்தை திமுக கூட்டணியில் தொடங்கினார். பின்னர் அ. தி. மு. கவில் சேர்ந்தார். அ. தி. மு. கவிலிருந்து விலகி அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை 2007 ஒகஸ்ட் 31இல் தொடங்கினார். இக்கட்சி 2011 சட்டமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. கூட்டணி சார்பில் இரட்டை இலைச் சின்னத்தில் தென்காசி மற்றும் நாங்குநேரி ஆகிய இரு சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதன் பின்னர் உட்கட்சிப் பூசல்களால் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டது - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணில் எனது நல்ல மாணவன் இப்போது அவர் மாறிவிட்டார்

## கூறுகின்றார் ஜி.எல்.பீரிஸ்



**கொழும்பு, மார்ச் 13**

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனது மாணவன். ஆனால் தற்போது அவர் மாறிவிட்டார். ஒரு ஆசிரியராக இது தொடர்பில் அதிர்ச்சியாக உள்ளது." - என்று சட்டத்துறை பேராசிரியரான பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

குருநாகல், குளியாபிட்டியவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜி.எல்.பீரிஸ் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். ராஜபக்சக்களின் சகா எனவும் எனவும் தாக்கியிருந்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது பற்றி பீரிஸிடம் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர் கூறியவை வருமாறு-

ரணில் விக்கிரமசிங்க எனது மாணவன். பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது ஒழுக்கமாக இருந்தார். சூழ்நிலைக்கேற்ப பேசுவார். ஆனால் குருணாகலைக் கூட்டத்தில் காட்சிதந்த ரணில் முற்றிலும் மாறுபட்டவர். எல்லோரையும் தாக்கினார். பல்லைக்கழகத்தில் நான் பார்த்த ரணில் அல்லர் இவர். எனக்கே வியப்பாக இருந்தது. எது எப்படி இருந்தாலும் விமர்சனங்களைக்கண்டு பின்வாங்கப்போவதில்லை. எமது பயணம், திட்டம் வெற்றி என்பதால்தான் விமர்சனம் வருகின்றது-என்றார்.

# ஒட்டுசுட்டான்- மாங்குளம் வீதியில் பொலிஸாரின் வாகனம் விபத்து!



முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்குரிய பொலிஸ் வாகனமொன்று நேற்று முன் தினம் மாலை ஒட்டிசுட்டான்- மாங்குளம் வீதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து, தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி பயணித்த போதே குறித்த வாகனம் தச்சடம்பன் பகுதியில் வைத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# காட்டு யானை தாக்கி வயோதிபர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைதீவு - அம்பகாமம் பகுதியிலுள்ள பழைய கண்டி வீதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அம்பகாமம் பகுதியிலுள்ள பழைய கண்டி வீதியில் யானை தாக்கியதில் 62 வயதான வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி எஸ்.எச்.மஹ்ரூஸ், சடலத்தை பார்வையிட்டுள்ளதுடன் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.

இதனிடையே, தொடர்ச்சியாக தமது பகுதிக்குள் நுழையும் காட்டு யானைகளால் தாம் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விரைவில் புதிய பயணிகள் முனையம்

கொழும்பு, மார்ச் 13

கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய பயணிகள் முனையமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய பயணிகள் முனையத்தில் 30 வெளியேறும் கருமபீடங்கள் நிறுவப்படவுள்ளதாக அதன் செயலாளர் ருவன்சந்ர குறிப்பிட்டார்.

தற்போது காணப்படும் பயணிகள் முனையத்தில் போதுமான இடவசதி இன்மையால் புதிய பயணிகள் முனையத்தை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக உள்நாட்டு நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன்சந்ர தெரிவித்துள்ளார்.

(அ)

# ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து பயணிப்பதில் பிரச்னை கிடையாது!

## அமைச்சர் பவித்திரா கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளதாக வனசீவராசிகள், வன வள பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிப்பதில் எவ்வித பிரச்னையும் இல்லை.

எவ்வாறிருப்பினும் நான் பொதுஜனபெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சராகவே அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கின்றேன்.

அந்த வகையில் பொதுஜன பெரமுன ஜனாதிபதியுடனேயே இருக்கின்றது. இனிவரும் காலங்களிலும் அதில் எந்த மாற்றங்களும் இருக்காது. உத்தேச தேர்தல்களில் பொதுஜன பெரமுனவின் நகர்வுகள் தொடர்பாக

விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து, அதற்கமைய இறுதி தீர்மானத்தை எடுப்போம்.

தேவையென்றால் ஏனைய கட்சிகளைப் போன்று கூட்டத்தைக் கூட்டி பொதுஜன பெரமுனவின் பலத்தைக் காண்பிக்கலாம். 2015இல் தோல்விடையந்ததன் பின்னர் திரைக்கு பின்னால் பாரிய மக்கள் சக்தியை படிப்படியாக தோற்றுவித்து, காலி முகத்திடலில் ஒட்டு மொத்த பலத்தையும் காண்பித்தோம்.

அதன் ஊடாக 2018 உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் பெரும்பாலான தொகுதிகளில் வெற்றி பெற்றோம்.

அதனை விட சிறந்த யுக்தியை இம்முறையும் பின்பற்றுவோம். அதனை விடுத்து சில கட்சிகளைப் போன்று மக்களை ஒன்று திரட்டி கூட்டங்களை நடத்தி போலியான பலத்தைக் காண்பிக்க நாம் விரும்பவில்லை.

ஏனைய கட்சிகள் தொடர்பிலும், எமது கட்சி தொடர்பிலும் மதிப்பீடு செய்து அவற்றை அறிந்து வைத்திருக்கின்றோம். எனவே பொதுஜன பெரமுனவுடன் இணையும் எந்தவொரு கூட்டணியும் நிச்சயம் வெற்றி பெறும் என்பது உறுதி-என்றார்.

(அ)

# எல்பிட்டிய துப்பாக்கிச் சூடுகள் இரண்டும் ஒரே குழுவினரால் மேற்கொள்ளப்பட்டவை

கொழும்பு, மார்ச் 13

எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரண்டு இடங்களில் நேற்று முன் தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்கள் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களிடையேயான மோதல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு துப்பாக்கிப் பிரயோகங்களும் ஒரே குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிட்டிகல மற்றும் அம்பலாங்கொடையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களில் மூவர் உயிரிழந்ததுடன், 06 பேர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பிட்டிகல - குருவல பகுதியில் வர்த்தக நிலையமொன்றுக்கு அருகில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

காயமடைந்த இரண்டு ஆண்களும் பெண்ணொருவரும் சிகிச்சைகளுக்காக கல்லிந்த பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் கொலைச் சம்பவமொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரை இலக்கு வைத்து, ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையே, அம்பலாங்கொடை - கலபொட பகுதியில் நேற்று முன் தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் காயமடைந்தனர்.

இந்த இரண்டு துப்பாக்கிப் பிரயோகங்கள் தொடர்பில் கூட்டு விசாரணையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் இந்த விசாரணை முன்னெடுக்கப்படுமென பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பிட்டிகல துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணம் வெளியாகியுள்ள போதிலும், அம்பலாங்கொடை துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

எவ்வாறாயினும், திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான கொலைச் சம்பவங்களை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமென பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

(அ)

# நாணய நிதியத்துடன் கலந்துரையாட மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

**சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவதற்கு மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பளிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலுக்கு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அதனை பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன புறக்கணித்தன.

எவ்வாறாயினும், இந்த கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்தின் தொழிலுட்ப மதிப்பாய்வு அறிக்கையை அவர் கோரியிருந்தார்.



குறித்த அறிக்கையை வழங்குவதற்கு கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்ட நிலையில், அதனை அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அனுப்பி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. (அ)

# தப்பியோட முற்பட்ட சந்தேக நபர் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலி!

கொழும்பு, மார்ச் 13

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய விகாரையில் தேரர் ஒருவரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

அத்தனகல்ல-யட்டவத்த பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை தேடுவதற்காக சென்றிருந்தபோது சந்தேக நபர் தப்பிச்செல்ல முற்பட்ட போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேக நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய கஹடான ஸ்ரீ கனாராம விகாரையைச் சேர்ந்த தேரரொருவர், கடந்த ஜனவரி 23ஆம் திகதி சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் துப்பாக்கிதாரி என சந்தேகிக்கப்படும் குறித்த நபர், மொனராகலை-ஹம்பேகமுவ பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அரலகங்வில பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர் குறித்த பகுதியில் இருப்பதாக ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கைது செய்யப்பட்டிருந்தார். (அ)

# கிளிநொச்சியில் மாணவர்களை தவிர்த்து செல்லும் அரச பஸ்கள்!

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் இயங்கும் அரச பஸ்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றாது பயணிப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த பிரச்னை நீண்ட காலமாக காணப்படுவதாகவும், இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்துக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த பிரச்னையானது, எழுதுமட்டுவாள் தொடக்கம் இயக்கச்சி வரையான சுமார் 8 இற்கும் மேற்பட்ட பிரதேசங்களில் காணப்படுவதாகவும் இதனால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதுடன்,பூரண கல்வியை பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்விடம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் நேரடியாக தலையீடு செய்து, உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# தாமரை கோபுர உணவகத்தில் நடந்த களியாட்டத்தில் போதைப்பொருள் உட்கொண்ட யுவதி, இளைஞன் பலி!

கொழும்பு, மார்ச் 13

கொழும்பு தாமரைக் கோபுரத்தில் உள்ள உணவகம் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற களியாட்டத்தில் கலந்து கொண்ட யுவதியும் இளைஞனும் உயிரிழந்துள்ளனர்.

முல்லேரிய பிரதேசத்தை சேர்ந்தவரான, அழகு நிலையம் ஒன்றின் முகாமையாளரான ஹெட்டியாரச்சி ரசாங்கிகா ருக்ஷானி (வயது 27) தெஹிவளையில் வசித்து வந்த சமிந்து திரங்க பெர்னாண்டோ (வயது 22) இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விருந்தின்போது திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விருந்தின் போது இந்த இளைஞனும் யுவதியும் போதைப் பொருள் உட்கொண்டமை தெரியவந்துள்ளது.

இந்த உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தனது மகளின் மரணம் சந்தேகத்திற்குரியது என உயிரிழந்த யுவதியின் தாயார் டொனா ரசிகா நிலாந்தி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அந்த விருந்தில் உயிரிழந்த ரசாங்கிகா உட்பட ஏழு பேர் போதைப்பொருளை உட்கொண்டதாக அவரது காதலன் எனக் கூறிக்கொள்ளும் இளைஞன் கூறியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இறக்குமதிக்கு அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வர்த்தமானி ரத்து!

கொழும்பு, மார்ச் 13

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சில பலசரக்கு பொருட்களை மீள் ஏற்றுமதிக்காக நாட்டிற்கு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வர்த்தமானியை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

மிளகு, சாதிக்காய், மஞ்சள், இஞ்சி போன்ற பொருட்களுக்கே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த பலசரக்கு பொருட்கள் மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கிய தன் மூலம் உள்ளூர் பலசரக்கு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் சுற்றி வளைப்பு; பெண்கள் உட்பட 1030 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 13

நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் சுற்றி வளைப்புக்களின் போது, ஆயிரத்து 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 39 பெண்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 46 பேர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

17 பேர் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையர்களிடமிருந்து ரூ.3000 பில்லியன் மோசடி செய்துள்ள பிரமிட் மோசடியாளர்கள்

கொழும்பு, மார்ச் 13

சட்டவிரோத பிரமிட் திட்டத்தில் ஈடுபட்டமையால் இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட 'ஒன்மக்ஸ் டிரி' நிறுவனத்தின் தலைவர் மதுரங்க பிரசன்ன சமரக்கோன் என்றழைக்கப்படும் சாம் பஸ்நாயக்க மற்றும் ஜோர்ஜிய பிரஜை ஆகியோரை சர்வதேச பொலிஸாரால் கைது செய்ய கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இந்த சட்டவிரோத நிதி பரிவர்த்தனைகளை மேற்கொண்ட 'ஒன்மக்ஸ் டிரி' தலைவர் மதுரங்க பிரசன்ன சமரக்கோன், தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். இவரை இந்த சம்பவத்தில் ஏழாவது சந்தேகநபராகக் குறிப்பிட்டு சர்வதேச பொலிஸாரால் கைது செய்ய ஆங்கிலத்தில் திறந்த பிடியாணை பிறப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திடம் விடுத்த கோரிக்கையை கவனத்தில் கொண்டு நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

'ஒன்மக்ஸ் டிரி' தனியார் நிறுவனத்தில் இலங்கை மக்கள் முதலீடு செய்த பணத்தில் இருந்து சுமார் 600 பில்லியன் ரூபாவை ஜோர்ஜியாவைச் சேர்ந்த காபர் அஸ்லானிஸ்விலி அந்த நாட்டிலுள்ள தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்து பெற்றுக்கொண்டுள்ளார். அவரை இந்த வழக்கின் எட்டாவது சந்தேக நபராக பெயரிடுமாறும், அவருக்கு திறந்த பிடியாணை பிறப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் துறை நீதிமன்றத்தில் கோரியது.

இதன்படி, 'ஒன்மக்ஸ் டிரி' தனியார் நிறுவனத்தின் தலைவர் சாம் பஸ்நாயக்க இந்த வழக்கின் ஏழாவது சந்தேக நபராகவும், ஜோர்ஜிய பிரஜை காபர் அஸ்லானிஸ்விலி எட்டாவது சந்தேகநபர் எனவும் நீதிமன்றம் பெயரிட்டதுடன், சர்வதேச பொலிஸாரால் இருவரையும் கைது செய்ய ஆங்கிலத்தில் திறந்த பிடியாணைகளை பிறப்பித்தது.

இந்த வழக்கின் ஆறாவது சந்தேக நபரான 'ஒன்மக்ஸ் டிரி' இணையத்தளத்தின் ஸ்தாபகரும், வி ரெக் மென்பொருள் நிறுவனத்தின் உரிமையாளருமான குஜன் விக்ரமதிலக என்பவர் நீதிமன்ற பிணை உத்தரவை மீறி வெளிநாடு சென்றுள்ளதால், அவரை கைது செய்ய நீதிமன்றம் ஆங்கிலத்தில் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் நான்காவது சந்தேகநபரான 'ஒன்மக்ஸ் டிரி' நிறுவனத்தின் பணிப்பாளரான சாரங்க ரந்திக ஜயதிஸ்ஸ, சாம் பஸ்நாயக்கவின் வங்கிக் கணக்குகளில் 3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மெய்நிகர் நாணயத்தை நேரடியாக வரவு வைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

'ஒன்மக்ஸ் டிரி' தனியார் கம்பனியின் தலைவர் மதுரங்க பிரசன்ன சமரக்கோன் 2023 மார்ச் 05 அன்று கொழும்பில் உள்ள ஷங்கரில்லா ஹோட்டலில் விசேட கூட்டமொன்றை நடத்தி 'ஒன்மக்ஸ் டிரி' இல் பணம் முதலீடு செய்வது தொடர்பாக உரை நிகழ்த்திவிட்டு மார்ச் 21 நாட்டை விட்டு வெளியேறினார். அவர் இதுவரை நாடு திரும்பவில்லை என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்தனர்.

இந்த சந்தேகநபர்கள் இலங்கை மக்களை ஏமாற்றிய பணத்தின் தொகை 3000 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக உள்ளதுடன், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றங்களைச் செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். (அ)

# இந்திய மீனவர் அத்துமீறலை எதிர்த்து நேற்றுப் போராட்டம்

## துணைத் தூதரகத்திடம் மனு கையளிப்பு



**யாழ்ப்பாணம், மார்ச் 13**
**யாழ்ப்பாண கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழையும் இந்திய ட்ரோலர் படகுகளை தடுத்து நிறுத்துமாறு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கண்டன போராட்டமொன்று இடம்பெற்றது.**

தீவகப் பகுதி தெற்கு வேலணை பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திடம் மகஜர் கையளித்ததுடன் கண்டனப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

இந்த கண்டனப் போராட்டத்தில், அடிக்காதே அடிக்காதே மீனவர் வயிற்றில் அடிக்காதே, இந்திய அரசே தமிழக ட்ரோலரை தடுத்து நிறுத்து, தொப்புள் கொடி உறவே நமது கடல் வளத்தை அழிக்காதே என்ற வாசகங்களை ஏந்தியவாறு மீனவர்கள் பங்கேற்றனர்.

இந்தப் போராட்டத்தில் தீவகம் தெற்கு கூட்டுறவுச் சமாசங்களின் தலைவர் ஆறுமுகம் கனகசபை, யாழ். மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் கிராமிய கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் செல்லத்துரை நற்குணம், யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ கந்தவேல் புனித பிரகாஷ் மற்றும் யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் உள்ளிட்ட கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ)




# வடக்கு-கிழக்கு பெண்களின் கூட்டு மகளிர் தினம் நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 13
வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு மகளிர் தினம் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யுத்தம் மற்றும் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கோரியும், பால்நிலை சாத்துவம், உரிமைகளை வலியுறுத்தியும் கவனயீர்ப்பு பேரணி ஏ-9 வீதி ஊடாக பசுமை பூங்காவைச் சென்றடைந்தது.

தொடர்ந்து, பசுமைப் பூங்காவில் மகளீர் தின நிகழ்வு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் ஆரம்பமானது.

சுடரேற்றலுடன் ஆரம்பமான குறித்த நிகழ்வில், பெண்களின் உரிமை, பால்நிலை சமத்துவம், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி கருத்தரங்குகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

### ஓய்வு பெற்ற 1,000 பேர் உட்பட

# 2,500 ஆங்கிலமொழி ஆசிரியர்களை இணைப்பதற்கு அரசு நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 13
2,500 ஆங்கில ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள வேண்டுமென, தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவசர தேவை கருதி, மூன்று வருட ஒப்பந்த காலத்துக்கு ஆங்கில மொழி மூல பாடங்களை கற்பிக்கக்கூடிய 1,000 தகுதி வாய்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் உடனடியாக இணைத்துக்கொள்ளவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

ஆங்கில மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிப்பதாக அறிவித்த ஜனாதிபதி, 2025 ஆம் ஆண்டளவில் குறைந்தது 200,000 மாணவர்களாவது ஆங்கில மொழிக் கல்வியைப் பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டை மோதித்தள்ளிய லொறி

கொழும்பு, மார்ச் 13
சாரதியின்றி பயணித்த பாரவூர்தி ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொடவின் வீட்டின் மீது மோதியுள்ளது. இதனால் பாராளுமன்ற உறுப்பினரின் வீடு சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் இரவு 8.00 மணியளவில் சாரதியின்றி ஓடிய பாரவூர்தி ஒன்று எம்.பியின் வீட்டின் மீது மோதியுள்ளது.

விபத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் இல்லை. சில நிமிடங்களுக்கு முன்னர் கொழும்பு சென்றுள்ளார்.

இந்த பாரவூர்தி வீட்டுக்கு அருகே உள்ள உயர்ந்த சாலையில் நிறுத்தப்பட்டு திடீரென கீழே ஓடியதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (அ)

# நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தத் தயார்!

## ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 13
சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்க்கட்சி தயாராக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி கலந்துரையாடல்களில் ஈடுபட தயாராக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஜீ.எல். பீரிஸ் இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய அளவிலான தேர்தல் இந்த ஆண்டு நடைபெறும் என்றும், அதற்கு பணம் இல்லை என்று கூறி எதிர்க்கட்சிகள் ஒத்திவைக்க அனுமதிக்காது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: எந்தத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டாலும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். சட்டம் மிகவும் தெளிவாக உள்ளது. அதன்படி செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜூலை 15ஆம் திகதிக்குப் பிறகு, சட்டப்படி ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், மே 13ஆம் திகதி ஆரம்பிக்கும் வாரத்திற்குள் தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் தேர்தலுக்கு பயந்து, பணமில்லை என்று கூறி தேர்தலை ஒத்திவைக்க பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட தொகையையோ அல்லது அதில் ஒரு பகுதியையோ பொதுத் தேர்தலுக்குப் பெற முடியாது என்றும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தினால் கூட்டு நிதியில் இருந்து தனித் தொகையை ஒதுக்க வேண்டும் என்றும் சட்டம் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதிப்பதற்கான திகதியை இந்த வாரம் கூடவுள்ள பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானிக்கவுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்- என்றார். (அ)

# மத மாற்றத்துக்கு எதிராக சட்ட ரீதியில் நடவடிக்கை

## பதிவு செய்யப்படாத மத நிலையங்களை முற்றுகையிட முடிவு

கொழும்பு, மார்ச் 13
மக்களை அந்நிய மதங்களுக்கு மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும் மத நிலையங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பது குறித்து புத்த சாசனம்,சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

பதிவு செய்யப்படாத மத நிலையங்களை முற்றுகையிடுவதற்கு பொலிஸ் திணைக்களத்தின் உதவியை பெற துறைக்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்ரமநாயக்க முடிவு செய்துள்ளார்.

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பௌத்த விவகார ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது டன் அதற்காக பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பௌத்த பீடங்களின் தலைமை பிக்குகளுடன் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த நடவடிக்கை குறித்து அமைச்சர் விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமய வழிப்பாட்டு தலங்கள், பிக்குகள் சம்பந்தமான பிரச்னைகள்,சமயத்தை திரிபுப்படுத்துவது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பௌத்தபிக்குகளும் அமைச்சரும் இதன் போது விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

# தென்கிழக்கு பல்கலை துணைவேந்தர் பதவிக்காக ஏழு பேர் களத்தில் குதிப்பு!

அம்பாறை, மார்ச் 13

**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது மூன்றாண்டு பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ் 8ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற அதேவேளை குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த மாதம் 8 ஆம் திகதி விடுத்திருந்தார்.**

அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழு பேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய உபவேந்தர், பல்கலைக்கழக பேரவையின் விசேட ஒன்றுகூடல் ஒன்றின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவு கோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்வர். குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறை தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசார், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளமை விசேட அம்சமாகும். (அ)

# பெண் ஆளுமைகள் கௌரவிப்பு



அம்பாறை, மார்ச் 13

"உங்களால் உங்கள் வீட்டுக்கு பெருமை" எனும் தொனிப்பொருளில் சிலோன் மீடியா போரம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள "பெண் ஆளுமைகள் 09 பேரை வீடு தேடிச் சென்று கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் மூன்று கட்டங்களாக இக்கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. முதற் கட்டமாக காலையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமாணி சஹ்பி எச்.இஸ்மாயில் கலந்து கொண்டார்.

இரண்டாம் கட்டமாக மாலையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பொலனறுவை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எந்திரி எம்.எஸ்.எம். நவாஸ் கலந்து கொண்டார். மூன்றாம் கட்டம் ஞாயிற்றுகிழமை இடம்பெற்றது.

இதன்போது மருத்துவம், கவிதை, கட்டுரை, எழுத்து, ஊடகம் மற்றும் கல்வித்துறையில் பிரகாசிக்கும் பெண் ஆளுமைகளான கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஸஹிலா இஸ்ஸதீன், அல்-ஸஹ்றா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ரஜினுல் மஜீதியா, சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீன், அல்-அக்ஸா வித்தியாலய பிரதி அதிபர் ஏ. றெஜினா, சிறுவர் உரிமை பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எப். சுமைய்யா, எம்.ஐ.ஹைறுன் நிஸா, ஊடகவியலாளர் ஆசிரியை சுல்பிகா ஷரீப் ஆகியோரை வீடு தேடிச் சென்று சிலோன் மீடியா போரத்தினர் கௌரவித்தனர். (அ)

# நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தினால் ரமழான் பொதிகள் வழங்கல்




அம்பாறை, மார்ச் 13

நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தினால் புனித ரமழானை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கு ரமழான் பொதிகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம். சரீம், கணக்காளர் சாஜிதா பர்வின், திட்டமி டல் பிரதிப் பனிப்பாளர் ஏ.எம்.சுல்பிகார் அலி, உட்பட பல ரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்க அங்கத்தினர்கள் சுமார் 300 பேருக்கு ரமழான் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)

# புனிதமிகு ரமழானை வரவேற்கும் முகமாக மாபெரும் சிறுவர் பேரணி




திருமலை, மார்ச் 13

புனிதமிகு ரமழானை வரவேற்கும் முகமாக மாபெரும் சிறுவர் பேரணி நேற்று முன்தினம் கிண்ணியாவில் இடம் பெற்றது

இஸ்லாமியர்களில் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான நோன்பை வரவேற்கும் முகமாகவே இந்த பேரணி இடம் பெற்றது.

சிறுவர் செயற்பாட்டு மையமான அல் மஹ்தூம் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றார்களும் கலந்து கொண்டனர்.

நோன்பை வரவேற்கு முகமாக பல்வேறு வகையான வசனங்கள் அமைந்த பதாகைகளை ஏந்தியவாறு கிண்ணியா புகாரியடி சந்தியில் ஆரம்பித்த ஊர்வலம் ஜாவா பள்ளியில் ஊடாக நகர சபை மைதானத்தை வந்தடைந்தது. (அ)

# அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு சான்றிதழ்




அம்பாறை, மார்ச் 13

அனர்த்த வேளைகளில் பொது மக்களை பாதுகாத்து இழப்புக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலம் இளைஞர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை மக்களோடு ஒன்றிணைக்கும் 'சமூக மட்ட வேலைத் திட்டத்தின்' கீழ் பயிற்சியளிக்கப்பட்டவர்க ளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.


அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான், அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எல்.ஹனீஸ், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸப்பிர், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட சுமார் 50 இளைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கு நீச்சல், தீ அனர்த்தம், முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயிர்ப் பாதுகாப்பு பயிற்சி நெறிகள் ஊடாக ஒரு வருடம் மற்றும் மூன்று மாத கால பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக எம்.ஏ முனாஸீர்



அம்பாறை, மார்ச் 13

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தினை சேர்ந்த எம்.ஏ முனாஸீர் பொதுச் சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கிழக்கு மாகாண சபையில் மாகாண திட்டமிடல் செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக சுமார் 15 வருடங்களாக கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேயவிக்ரம முன்னிலையில் அவர் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி திட்டமிடலில் முதுமாணிப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ரிக்ரொக்கினால் அச்சுறுத்தல்!

## டொனால்ட் ட்ரம்ப் கருத்து

நியூயோர்க், மார்ச் 13

**ரிக்ரொக் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் முகநூல் மக்களின் எதிரி என குறிப்பிட்டுள்ளார்.**



ரிக்ரொக்கினால் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என கருதுவதாக தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப், எனினும் இதனை தடை செய்வதை நான் ஆதரிக்கமாட்டேன். ஏன் என்றால் அதனை தடை செய்தால் மக்களின் எதிரியான முகநூலின் ஆதரவு அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

சிஎன்பிசி நேர்காணலில் ரிக்ரொக் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானதா என்ற கேள்விக்கே, நான் அவ்வாறே நம்புகின்றேன். நாங்கள் அமெரிக்க மக்களின் அந்தரங்கங்கள் மற்றும் தரவு உரிமைகளை பாதுகாக்கின்றோம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என ட்ரம்ப் பதிலளித்துள்ளார்.

ரிக்ரொக் செயலியை அமெரிக்காவில் தடை செய்வதை ட்ரம்ப் முதலில் ஆதரித்திருந்தார்.எனினும் தற்போது தனது முடிவை மாற்றியுள்ளார்.

ஏன் ரிக்ரொக்கினை தடை செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கினீர்கள் என்ற கேள்விக்கு, எனது ஆட்சிக்காலத்தில் அதனை தடை செய்திருக்க முடியும். ஆனால் காங்கிரஸே அதனை செய்யவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ரிக்ரொக்கினை தடை செய்வது மக்களின் எதிரி என கடுமையாக விமர்சிக்கப்படும் முகநூலிற்கான ஆதரவை அதிகரிக்கும் எனவும் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ரிக்ரொக்கினால் நன்மைகளும் உள்ளன. தீமைகளும் உள்ளன. ஆனால் ரிக்ரொக் பிடிக்காத விடயம். என்னவென்றால் ரிக்ரொக்கினை இல்லாமல் செய்தால் அது முகநூலை பெரிய விடயமாக்கிவிடும். ஏனைய ஊடகங்கள் பலவற்றுடன் நான் முகநூலை மக்களின் எதிரியாக கருதுகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# ஹமாஸ் இயக்கத்தின் 2ஆம் தர தளபதி பலி!

## இஸ்ரேல் இராணுவத் தரப்பு தகவல்



ஜெருசலேம், மார்ச் 13

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் இராணுவத்தின் துணைத்தலைவர் மார்வன் இஸா கொல்லப்பட்டிருக்கலாம் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பான தரவுகளை ஆராய்ந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு மேற்கொள்ளவிருந்த போர் நிறுத்த ஒப்பந்தம் சிக்கல்நிலையை எட்டியுள்ள நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினர் மீது தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது.

உண்மையில் மார்வன் இஸா கொல்லப்பட்டிருப்பின் கடந்த ஐந்து மாத கால போரில் கொல்லப்பட்ட ஹமாஸ் இயக்கத்தின் உயர்நிலை தலைவராக இவர் இருப்பார் என இஸ்ரேல் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலின் தாக்குதல் காரணமாக காசாவின் மேற்கு கரைப் பகுதி பாரிய அழிவுகளைச் சந்தித்துவருகின்றது.

இதேவேளை, பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் வகையில் அமெரிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றது. (அ)

# 150 பயணிகளுடன் பறந்த விமானத்தில் நடுவானில் உறங்கிய இரு விமானிகள்!




ஜகார்த்தா, மார்ச் 13

இந்தோனேஷியாவின் பற்றிக் எயார் நிறுவனத்திற்கு சொந்தமான பயணிகள் விமானம் திடீரென்று தடுமாற்றத்துடன் வானில் பறந்துள்ளது.

ஜகார்த்தாவுக்கு கடந்த மாதம் 25 ஆம் திகதி பயணித்த பற்றிக் எயார்பிளைட் நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் 153 பயணிகளும் இரண்டு விமானிகள் மற்றும் 4 விமான பணியாளர்களும் இருந்துள்ளனர்.

இந்தநிலையில் விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் தனது வழக்கமான பாதையை விட்டு விலகி சென்றுள்ளது.

இதனால், விமான கட்டுப்பாட்டு அறையில் உள்ள அதிகாரிகள் விமானிகள் இருவரையும் தொடர்பு கொள்ள முயற்சித்து இருக்கிறார்கள்.

ஆனால், எந்த பதிலும் கிடைக்கவில்லை.

சுமார் 35 நிமிடங்கள் இந்த பரபரப்பு நீடித்தது.

அதன்பிறகு விமானம் வழக்கமான பாதைக்கு வந்து தனது பயணத்தை தொடங்கியது.

இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டதில், குறித்த நேரத்தில் விமானிகள் இருவருமே தூங்கியமை தெரிய வந்துள்ளது.

குறித்த விமானத்தில் 32 மற்றும் 28 வயது மதிக்கத்தக்க இரண்டு விமானிகள் சேவையில் இருந்துள்ளனர்.

விமானம் புறப்பட்டு சென்ற சிறிது நேரத்தில் இணை விமானியிடம் கட்டளை விமானி, தனக்கு உறக்கம் அதிகமாக வருவதாக கூறி உறங்கியிருக்கிறார்.

ஆனால், சிறிது நேரத்தில் இணை விமானியும் தன்னை அறியாமல் தூங்கிவிட்டார்.

அதிர்ஷ்டவசமாக இந்த சம்பவத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

விமானம் சரியான நேரத்தில் வந்து தரையிறங்கியுள்ளது.

எனினும், விமானிகளின் இந்த அஜாக்கிரதையான செயல் விமான பயணிகளின் பாதுகாப்பு குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. (அ)

# கேட் மிடில்டனின் பொய்யான படம் வெளியிட்டதால் சர்ச்சை

லண்டன், மார்ச் 13

வேல்ஸ் இளவரசியை காணவில்லை என்ற வதந்திகள் சற்றே அடங்கியிருந்த நிலையில், அவர் நலமாக இருப்பதாக அரச குடும்பம் ஒரு அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருந்தது.

உலகமே தொடர்ந்து அவதானித்து வரும் நிலையில், அரச குடும்பம் சில விடயங்களில் செய்துவிடும் அசமந்தபோக்குகள் அனைவரின் விமர்சனத்துக்கு உள்ளாகின்றது.

பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி கேட் மிடில்டன் திரிரென காணாமல் போய்விட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி சமூக வலைத்தளங்களிலும் வைரலாகியது.

இளவரசி பிரசவத்தின் பின் ஏற்பட்ட வயிற்றுக் கோளாறு காரணமாக சத்திர சிகிச்சை ஒன்றை செய்துள்ளார். ஜனவரி மாதம் முதல் இளவரசி கேட் மிடில்டன் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு இருந்தார்.

இதையடுத்து மத்திய லண்டனில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், வயிற்றுப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார் என்று கென்சிங்டன் அரண்மனை ஒரு சில வாரங்கள் முன் செய்தி வெளியிட்டது.



கென்சிங்டன் அரண்மனை வெளியிட்ட செய்தியில், இளவரசிக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. அவர் ஈஸ்டர் பண்டிகை வரை (மார்ச் 31 வரை) அரச கடமைகளை செய்யமாட்டார்.

அவருக்கு ஓய்வு தேவைப் படுவதால் அரச கடமைகளை செய்வதில் இருந்து விலகியுள்ளார் என்று சொல்லப்பட்டது.

பிரிட்டன் அரச குடும்பம் சார்பாக கேட் நலமாக இருப்பதை நிரூபிப்பதற்காக அரச குடும்பம் சார்பாக ஒரு புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த புகைப்படமானது தற்பொழுது இணையத்தில் வைரலாகி வருவதுடன், சமூக வலைத்தளத்தில் பலரின் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

குறித்த புகைப்படம் பொட்டோசொப் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏன் இப்படி பொய்யான கருத்துக்களை வெளியிடுகின்றீர்கள் எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

பிரிட்டன் அரச குடும்பம் தொடர்பான உண்மைகள் தொடர்ந்து காலம் காலமாக மறைக்கப்படுவதன் பின்னணி என்ன, என்பது பற்றியும் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

மேலும், இளவரசி கேட் மிடில்டன் பற்றிய உண்மை தகவல் விரைவில் வெளியிடப்பட வேண்டும் எனவும் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஹெய்ட்டி பிரதமர் பதவி விலகினார்!

போர்ட் ஒ பிரின்ஸ், மார்ச் 13

ஹெய்ட்டியின் பிரதமர் ஏரியல் ஹென்றி பதவியில் இருந்து விலகியுள்ளதாக கயானாவின் ஜனாதிபதியும், தற்போதைய கரீபியன் சமூகத்தின் தலைவருமான மொஹமட் இர்பான் அலி தெரிவித்துள்ளார்.

அங்குள்ள நிலைமை தொடர்பில், ஆராய்வதற்காக அவசர உச்சி மாநாடு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், 74 வயதான



ஹென்றி தமது பதவியில் இருந்து விலகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

ஹெய்ட்டி பிரதமர் ஏரியல் ஹென்றியை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலையில், கடந்த வாரம் விமான நிலையம், காவல் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் மீதான தாக்குதல் அதிகரித்திருந்தன.

இதனால் தமது அத்தியாவசியமற்ற தூதரக ஊழியர்களை விமானம் மூலம் அமெரிக்காவும் வெளியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# என்னை விட திறமையானவர் போட்டியிட்டால் பூரண ஆதரவு

## ஜனக ரத்நாயக்க அறிவிப்பு



தேசிய சிவில் அமைப்பு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வகையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு, மார்ச் 13

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை எனக்கு உள்ளது. என்னை விட தகைமையானவர் போட்டியிடுவதாக இருந்தால் நான் அவருக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவேன். வங்குரோத்து நிலைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக் கூறவேண்டும். நாட்டு மக்கள் இவர்களை முழுமையாக புறக்கணிக்கவேண்டும் என தேசிய சிவில் அமைப்பு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் முறைமை மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. முறைமை பரிமாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். பொருளாதார நெருக்கடிக்கு 75 ஆண்டுகால ஆட்சி முறைமை பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிட முடியாது. ஏனெனில் 75 ஆண்டுகால ஆட்சியில் எந்த அரசாங்கமும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளவில்லை.

2015 முதல் 2024 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டும். அரசியல்வாதிகளின் முட்டாள்தனமான தீர்மானங்களினால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு நடுத்தர மக்களை அரசாங்கம் வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளது.

பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை நாங்கள் இந்த மாதம் வெளியிடுவோம். 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் மூடர்கள். இவர்களை மக்கள் இனி தெரிவு செய்யக்கூடாது. மோசடியாளர்களை அப்புறப்படுத்தாமல் சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீளும் நடவடிக்கைகளை செயற்படுத்தும்போது மக்களின் பசியை போக்கும் கொள்கையை நிலையாக செயற்படுத்துவோம். இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்கள் தீர்மானமிக்கது. நாட்டு மக்கள் அறிவுபூர்வமாக சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தலைமை எனக்கு உள்ளது. என்னை விட சிறந்த தகைமையானவர் ஒருவர் போட்டியிடுவதாக இருந்தால் அவருக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவேன் -என்றார். (அ)

# பாடசாலையொன்றிலிருந்து 7 மோட்டார் குண்டுகள் மீட்பு!



வவுனியா, மார்ச் 13

வவுனியா, மடுகந்தை பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் இருந்து வெடிக்காத நிலையில் 7 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் இருந்த குப்பைக் குழியை துப்பரவு செய்த போதே குறித்த குழிக்குள் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப் பகுதியில் இருந்து மோட்டார் குண்டுகளை கைப்பற்றியுள்ளதோடு அக் குண்டுகளை அழிப்பதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 13

காலியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். இதில் மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் காலி - அம்பலாங்கொடை - கலகொட பகுதியில் உள்ள கடை ஒன்றின் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பலப்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

# நப்கின்களுக்கு வரி இல்லை



கொழும்பு, மார்ச் 13

நாட்டுக்கு தேவையான 92 வீதமான சுகாதார நப்கின்கள் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அவற்றுக்கு வரி அறவிடப்படுவதில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தல்துவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைக் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் எஞ்சிய 8 வீத பொருட்களை உற்பத்திப் பொருட்களாக ஒரு நிறுவனம் இலங்கைக்கு கொண்டுவருவதாகவும், அதற்கு 22.5 வீத வரியே அறவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் உற்பத்தியாளரைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவே அந்த வரித் தொகை அறவிடப்படுவதாக அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# தமிழக உளவியலாளர் சரண்யா ஜெய்குமாரின் செயலூக்க உரை கோப்பாய் கலாசாலையில்!





யாழ்ப்பாணம், மார்ச் 13

இந்தியத் துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் தமிழகத்தின் பிரபல செயலூக்கப் பேச்சாளர் முனைவர் சரண்யா ஜெய்குமார் பங்கேற்ற செயலூக்க உரை நேற்று முன் தினம் மாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடக்கவுரையை இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தின் இணைப்பாளர் லண்டனைச் சேர்ந்த பொறியியலாளர் இணுவிலூர் நடராசா சச்சிதானந்தம் ஆற்றினார். நிறைவுரையை லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் சிவாப்பிள்ளை ஆற்றினார்.

நிகழ்வில் தற்கால மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கைக்கொள்ளக்கூடிய உத்திகள் என்ற பொருளில் முனைவர் சரண்யா ஜெய்குமார் உரையாற்றினார். (அ)

# யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக 4,500 ஊழியர்களை இணைக்க அங்கீகாரம்



கொழும்பு, மார்ச் 13

யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக வனஜீவராசிகள் அமைச்சுக்கு 4,500 பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள நிதியமைச்சு அனுமதியளித்துள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

நாட்டின் காடுகளை மொத்த நிலப்பரப்பில் 32 வீதம் வரை அதிகரிக்கும் திட்டத்துடன் தொடர்புடைய வன எல்லைகளை நிர்ணயம் செய்யும் பணி இந்த ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச காடுகள் தினம் மார்ச் 21 அன்று கொண்டாடப்படுகிறது. இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தலா ஒரு செடியை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் வன விரிவாக்க உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் வனப்பரப்பை அதிகரிக்கச் செய்யும் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மொத்த நிலப்பரப்பில் காடுகளை 32 வீதம் வரை அதிகரிப்பதற்கான திட்டம் தொடர்பில் காடுகளின் எல்லை நிர்ணயம் இந்த வருடத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது எமது அமைச்சின் கீழ் உள்ள வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் விடயமாகும்.

யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக வனவிலங்கு அமைச்சுக்கு 4,500 பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அதற்காக புதிய பணியாளர்கள் யாரும் நியமிக்கப்படமாட்டார்கள். அமைச்சுக்கு இணைத்துக் கொள்ள அங்கீகாரம் பெற்ற பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏற்கனவே யானை வேலியின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்-என்றார். (அ)

## வடக்கு...

முன்னர் அவர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகவும் கல்வி அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், வடமேல் மாகாண பிரதம செயலாளராக தீபிகா குணரத்ன நேற்று நியமிக்கப்பட்டார். (ஐ)

## ஓ பொசிற்றிவ்...

இரத்ததான முகாம்களை நடத்த விரும்புவோரை அதற் கான முயற்சிகளை முன் னெடுக்குமாறும் மேலதிக விவரங்களை தெரிந்து கொள்வதற்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ)

## வெடுக்குநாறியில்...

திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தினர் என்று நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியது. இதனையடுத்து எண்மரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், சட்டத்தரணிகளான சிறீ காந்தா, க. சுகாஸ், தி. திருஅருள், கிறிஸ்ரினா, ஜிதர்சன், சஜித்தா, சாருகேசி, விதுசினி, கீர்த்தனன், யூஜின் ஆனந்தராஜா, கொன்சியஸ் உள்ளிட்ட பலர் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

## இளம்...

ஆயுதங்களுடன் நின்ற சிலர் அவர்களை வழி மறித்தனர்.

அவர்களிடமிருந்த தப்பித்த இருவரும் கடற்படை முகாமுக்குள் நுழைந்தனர். ஆனால், அவர்களை கடற்படையினர் வெளியே விரட்டி விட்டனர்.

முகாமிலிருந்து வெளியே வந்தவர்களை மனைவியை ஒரு காரிலும் கணவரை இன்னொரு காரிலும் அந்தக் கும்பல் ஏற்றிச் சென்றது. மனைவியை ஏற்றி வந்த கார் அவரை சித்தங்கேணி சந்தியில் இறக்கிவிட்டு சென்றுள்ளார்.

அங்கிருந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு சென்ற மனைவி தனது கணவர் கடத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனிடையே, காரில் கடத்தி வந்தவரை அதிலிருந்தவர்கள் வாளால் வெட்டியுள்ளனர். பின்னர் அவரை, வட்டுக்கோட்டை பிரதேச மருத்துமனையிலுள்ள மாமரத்தின் கீழே அவரை தூக்கி வீசிவிட்டு சென்றனர்.

படுகாயமுற்றவரை கண்ட சுகாதார பணியாளர்கள் இது குறித்து மருத்துவருக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினர். அங்கு வந்த மருத்துவர் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கு சென்ற சில நிமிடங்களிலேயே அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திவரும் பொலிஸார் நேற்று கடற்படை முகாமுக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேசமயம், இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பகுதியில் வைத்து நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதானவர்கள் அராலி மத்தி, அராலி மேற்கை சேர்ந்த 22, 25, 32 மற்றும் 37 வயது நபர்களா வர்.

முன்னதாக, உயிரிழந்த நபருக்கும் சந்தேகத்தின் அடிப்படையில் கைதானவர்களுக்கும் இடையே கடந்த 2023ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை - மாவடி வைரவர் கோயிலில் நடந்த திருவிழாவின்போது முறுகல் நிலை ஏற்பட்டது என்றும் இதன் விளைவாகவே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரி வித்தனர்.

மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஐ)

# அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்தாவிடின் 25ஆம் திகதிக்கு பின்னர் மாபெரும் போராட்டம்

## இப்படி எச்சரிக்கின்றனர் தீவக கடற்றொழிலாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

இந்திய அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்தாது விடின் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று தீவக கடற்றொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீன்பிடி படகுகளை தடுத்து நிறுத்துமாறு கோரி நேற்று செவ்வாய்க்கிழமை தீவகத்தின் வேணைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கண்டன போராட்டத்தை நடத்தியது. அத்துடன், அவர்கள் யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்திடம் மனு ஒன்றையும் வழங்கினர்.

அந்த மனுவில், தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் எமது வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்திய மீனவர்களின் படகுகளை தடுத்து நிறுத்துமாறு இலங்கை மற்றும் இந்திய அரச உயர் மட்டம் வரை மனுக்களை கையளித்தது மட்டுமல்லாது கண்டன போராட்டங்களையும் மேற்கொண்டோம்.

ஆனால், எமது கோரிக்கை தொடர்பில் இந்திய அரச உயர் மட்டம் இது வரை சாதகமான பதில் எதுவும் வழங்கவில்லை. ஆகவே, எமது கோரிக்கை அடங்கிய மனு தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண இந்திய துணை தூதரகத்திடம் வழங்கியுள்ளோம்.

எமது மனுவுக்கான பதிலை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கோரிக்கை விடுத்த நிலையில் வழங்காத சந்தர்ப்பத்தில் 25ஆம் திகதிக்கு பின்னர் மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளோம் - என்றுள்ளது. (ஐ)

## வெடுக்குநாறி...

நடைபெறாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார் என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக, நீதிமன்றின் அனுமதியுடன் வெடுக்குநாறிமலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. பொலிஸார் இதற்கு பல தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். அத்துடன், தொல்பொருளுக்கு சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் ஆலயத்தின் பூசகர் உட்பட 8 பேரை கைது செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழில்...

காயமடைந்தார்.

உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியே சுடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார தெரிவித்தனர்.

காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் படபட்டுள்ளார். (ஐ)

## ஐ.எம்.எவ்....

வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 25 வீதமானவர்கள் உடை குறைந்தவர்கள். இதுபோன்ற இன்னும் பல புள்ளி விவரங்கள் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருகிறது என்றும் தாய்மார்களும் குழந்தைகளும் ஊட்ட சத்து குறைபாட்டால் பாதிக்கப்படக்கூடியவர்களாக மாறிவருவதை அடையாளம் காட்டுகின்றன.

இந்த நாட்டில் தாய்மார்கள், குழந்தைகள் - சிறார்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை உடனடியாகப் போக்க சர்வதேச நாணய நிதியத்தின் விசேட ஒத்துழைப்பு வேலைத்திட்டம் தேவை.

சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒரு சிறப்பு நிதியத்தை நிறுவி, இந்த போசாக்கின்மை நிலையிலிருந்து விடுபட விசேட தேசிய வேலைத்திட்டம் ஒன்று தேவை. ஊட்டச்சத்து குறைபாட்டின் வளர்ச்சி ஒரு தீயசுழற்சியை உருவாக்குலதற்கு சமன். இது நாட்டின் உற்பத்தித் திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அனைத்து அரச பாடசாலைகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டின் எதிர்காலம் சிறுவர்கள் என்பதால் அவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கம்பஹா பாடசாலை ஒன்றுக்கு ஸ்மார்ட் வகுப்பறை சாதனங்களை கையளிக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### வெடுக்குநாறிமலை விவகாரம்

# பாராளுமன்றில் போராடுவது தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வெடுக்குநாறிமலை விவகாரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்தில் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடி வருகின்றனர்.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடுகள் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்ட விதம், அவர்கள் சிறைச்சாலைக்குள் நடத்தப்பட்ட விதம், தொல்லியல் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டன என்று தொல்லியல் பணிப்பாளர் அறிக்கையளித்தது அனைத்துமே- தமிழ் மக்களின் மீதான பௌத்த ஆக்கிரமிப்பின் நிறுவனமயப்படுத்தப்பட்ட அம்சத்தின் கூட்டிணைவு என்பது தமிழ் தரப்பின் பொது அப்பிராயமாக உருவெடுத்துள்ள நிலையில், இந்த விவகாரத்தின் அரசியல் முக்கியத்துவத்தை கருதி, அடுத்த பாராளுமன்ற அமர்வில் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

### மன்னார் புதைகுழி வழக்கு:

# மருத்துவ அறிக்கை 4 மாதங்களில்!

மன்னார், மார்ச் 13

மன்னார் - திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை 4 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

திருக்கேதீஸ்வர மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகளை காபன் பரிசோதனை மேற்கொள்வது தொடர்பாக விவாதிக்கபட்டதாக சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு விசாரணை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சி. ஐ. டியினரால் சட்ட மருத்துவ அதிகாரி கேவகேயின் அறிக்கை நான்கு மாதங்களில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்த வழக்கு விசாரணை மீண்டும் மே 13 ஆம் திகதி அழைப்பதற்காக திகதியிடப்பட்டுள்ளது. (ஐ)

## பெறாமகளை...

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 10 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறும் தவறும்பட்சத்தில் 12 மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்கு மாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட 2 இலட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 24 மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ)

## சிறுவர்கள்...

நாட்டில் நிலவும் அதிக வெப்பத்தால் பிள்ளைகள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வெப்பநிலை மேலும் அதிகரித்தால் அது வெப்ப அதிர்ச்சி, வெப்ப பக்கவாதம் இவை துரதிர்ஷ்டவசமாக மரணத்துக்கும் வழிவகுக்கும். எனவே, பிள்ளைகளை வெளியக செயல்பாடுகள் எவற்றுக்கேனும் பயன்படுத்துவதானால் முற்பகல் 11 மணிக்கு முன்னரே ஈடுபடுத்த வேண்டும்.

தற்போது, பாடசாலைகளில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. அதனால், பிள்ளைகள் அதிகமாக வெளியில் திரிகின்றனர். இவ்வாறான நிலையில் சுற்றுச்சூழலின் வெப்பம் அதிகரிப்பதால் அவர்களுக்கு சோர்வு அதிகரிக்கும் - என்றும் கூறினார்.

## தென்னிலங்கை...

இடம்பெற்றுள்ளது. எனினும், இந்த சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் காலி அம்பலாங்கொடை மற்றும் பிடிகலை பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 4 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

அம்பலாங்கொடையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்தனர். மூவர் காயமடைந்தனர்.

இதேபோன்று, பிடிகலை பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தனர். பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை மரணமானார்.

இதேநேரம், கம்பஹா ஜா எல மற்றும் பியகம பிரதேசங்களில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றம் செய்ய முயல்கிறது அரசு!

## தேர்தலை தள்ளிப்போடத் திட்டமா?

கொழும்பு, மார்ச் 13

**எதிர்வரவுள்ள தேர்தல்களுக்கு முன்னதாக, பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டுவர அரசாங்கம் புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.**

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, கலப்பு தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தார்.

புதிய முறையின் கீழ், 160 எம்.பி.க்கள் தொகுதி வாரியாகவும், மற்றொரு 65 எம்.பி.க்கள் விகிதாசார பிரதி நிதித்துவத்தின் கீழும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இந்த முறையின் கீழ், தொகுதியில் அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் பாராளுமன்ற அங்கத்துவத்தை பெறுவார்.

பாராளுமன்றத்தில் கட்சிகளின் இடங்கள் அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதத்தில் விகிதாசார பிரதிநிதிகள் தெரிவாகுவர்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சி களின் பிரதிநிதிகளின் பார்வைக்கு இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சில தரப்பினர் பிரேரணைகளுக்கு ஆதரவாகவும், சில தரப்பினர் எதிராகவும் உள்ளதாக அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையை மாற்றுவதற்கு கடந்த காலங்களில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இதேபோன்ற முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால், அரசியல் கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு காரணமாக எந்த சட்டமும் இயற்ற முடியவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தேர்தல் நடத்தையில் உள்ள முரண்பாடுகள் காரணமாக பரவலாக விமர்சிக்கப் படுகிறது.

தேர்தல்கள் நெருங்கி வரும் நிலையில் அரசாங்கம் தேர்தல் முறையை மாற்றியமைக்க முயல்வது ஏன் என்ற கேள்வி தற்போது அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் உள்ள சமயங்க ளில் மேற்கொள்ளப்படும் தேர்தல் முறை மாற்றம், தேர்தலை தள்ளிவைப்பதற்கான முயற்சியென்ற விமர்சனமும் உள்ளது. (அ)

# பால்மா விலை குறைகிறது!

கொழும்பு, மார்ச் 13

ஒரு கிலோ பால் மாவின் விலை 100 முதல் 150 ரூபா வரை குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# 72 நாட்களில் 21 கொலைகள்

கொழும்பு, மார்ச் 13

2024 ஜனவரி 1 முதல் மார்ச் 12 வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் 30 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன் 14 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அத்துடன், 30 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 17 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஏனைய 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமராட்சி கிழக்கு மணல்காடு கடற்பகுதியில் சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் முகமாக கடற்படையினர் தொடர் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில், பருத்தித்துறை கடற்படையினர் வடமராட்சி கிழக்கு மணல் காடு கடற்பகுதியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த இருவரும் கைதாகினர்.

கைது செய்யப்பட்டவர்கள் குடத்தனை பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கெஹலிய மீதான வழக்கு ஏப்ரலில் மீளவும் விசாரணை



கொழும்பு, மார்ச் 13

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு ஜி. ஐ. குழாய்களை கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான வழக்கை தொடர முடியாது என பிரதிவாதிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று நிராகரித்தார்.

வழக்கை ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு அழைக்க உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் வழக்கின் விசாரணைத் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்.

2014 நவம்பர் 25 ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்ததாக, முதல் பிரதிவாதி ஊடகத்துறை அமைச்சராகப் பணியாற்றியபோது, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு ஜி. ஐ. குழாய்களை 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் விலையில் அதன் விளம்பரத் திட்டத்துக்கு கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினார் என்று இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் இலஞ்ச ஆணைக்குழு இவர் மீது குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ்.பல்கலைக்கழக இலச்சினையை அனுமதியின்றிப் பயன்படுத்தத் தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இலச்சினையை உரிய அனுமதியின்றி பயன்படுத்தினால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழா நாளை தொடக்கம் எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலான மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

அதன்போது, ஒளிப்பட, வணிக மற்றும் விற்பனை நிலையங்களினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இலட்சினை வியாபார நோக்கில் உரிய அனுமதிகள் எவையுமின்றி பொதுவெளிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அவ்வாறான செயற்பாடுகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய குற்றமொன்றாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இலட்சினை பல்கலைக்கழக மூதவையின் அனுமதியுடனே உபயோகிக்கப்படுதல் வேண்டும். ஆகவே அவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நேரில் வந்தோ, 021 221 8100 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது info@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் வாயிலாகவும் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ)

# பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து பெண் பலி!

கொழும்பு, மார்ச் 13

கொழும்பு பதுளை பிரதான வீதியின் பலாங் கொடை அளுத்நுவர பிரதேசத்தில் அரச பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளதாக பலாங் கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பொடிமனிக்கே என்ற 72 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

பாணந்துறையிலிருந்து மஹியங்கனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ.போ.ச பஸ்ஸின் படிக் கட்டிலிருந்து விழுந்து பலாங்கொடை ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை மாமல்கஹா பிரதேசத்தில் உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டுவிட்டு பொலனறுவைக்கு திரும்புவதற்காக பாணந்துறை பஸ்ஸில் பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (அ)

# சம்பிக்க இந்தியா பயணம்



கொழும்பு, மார்ச் 13

ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தியாவுக்குப் பயணமானார்.

மிசோரம் சர்வதேச பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் அங்கு நடைபெறவிருக்கும் சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சி குறித்த அறிஞர் மாநாட்டின் தொடக்க உரையை ஆற்றுவதற்கே அவர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். (அ)

# கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன

வவுனியா, மார்ச் 13

வவுனியாவில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித் திரிந்த 8 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்தில் அடைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு வவுனியா பண்டாரிக்குளம் மற்றும் வைரவர் புளியங்குளம் மற்றும் நகர மத்தி ஆகிய பகுதிகளில் இருந்து குறித்த மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபாய் தண்டப் பணத்தினை நகர சபைக்கு செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக் கொள்ளமுடியும் என நகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அடையாள பணிப்புறக்கணிப்பால் தேங்கியுள்ள 15 இலட்சம் தபால்கள்!

கொழும்பு, மார்ச் 13

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை ஊழியர்களினால் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பு காரணமாக 17 இலட்சத்துக்கு அதிகமான கடிதங்கள் மற்றும் பொருட்கள் குவிந்துள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் சுமார் 200,000 தபால்களும் பொருட்களும் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள தபால் நிலையங்களில் சுமார் 1500,000 கடிதங்களும் பொருட்களும் குவிந்து காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# ஆஸி. ரி - 20 அணியின் தலைவராக மார்ஷ்?

மெல்பர்ன், மார்ச் 13

அவுஸ்திரேலியா இருபது - 20 அணியின் பதில் தலைவராக மிற்செல் மார்ஷ் அணித் தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

அவுஸ்திரேலியா இருபது - 20 அணியின் தலைவராக இருந்த அரோன் பிஞ்ச் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில், மிட்செல் மார்ஷ் பதில் தலைவராக பணியாற்றினார்.

ஆஸி. அணியின் டெஸ்ட், ஒருநாள் அணிகளின் தலைவராக பட் கம்மின்ஸ் செயல்பட்டு வருகிறார். இவர் தலைமையில் ஒருநாள் உலகக் கிண்ணம், டெஸ்ட் சம்பியன்ஷிப் என்பவற்றை கம்மின்ஸ் கைப்பற்றியது.

இந்நிலையில், இருபது - 20 அணியின் தலைமையையும் பட் கம்மின்ஸிடம் வழங்க ஆஸி கிரிக்கெட் சபை முடிவு செய்தது. ஆனால், இருபது - 20 போட்டியை அணித் தலைவர் பதவி என்ற சுமை இல்லாமல் மகிழ்ச்சியாக விளையாட இருப்பதாக கம்மின்ஸ் கூறியிருந்தார்.

இதனால், சகலதுறை வீரரான மிற்செல் மார்ஷிடமே அணியின் தலைமை வழங்கப்படலாம் எனத் தெரிகிறது. இதற்கு அவுஸ்திரேலிய அணியின் தலைமை பயிற்றுநர் அண்ட்ரூ மக்டொனால்ட் சம்மதம் தெரிவித்துள்ளார்.

# பங்களாதேஷுக்கு எதிரான ரி - 20 தொடர் இலங்கை வசம்!

சிலேட், மார்ச் 13

பங்களாதேஷ் அணியை 28 ஓட்டங்களால் வெற்றி கொண்ட இலங்கை அணி, அந்த அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரையும் கைப்பற்றியது.

பங்களாதேஷ் - இலங்கை அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி இருபது - 20 கிரிக்கெட் போட்டி சிலெட் நகரில் சனிக்கிழமை நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் ஆடிய இலங்கை அணி 20 ஓவர் முடி வில் 7 விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்கள் எடுத்தது. அதிகப்பட்சமாக தொடக்க ஆட்டக்காரர் குசல் மெண்டிஸ் 86 ஓட்டங்கள் எடுத்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். பங்களாதேஷ் தரப்பில் தஸ்கின் அகமது, ரிஷாத் ஹூசைன் தலா 2 விக்கெட்களும், ஷொரிபுல் இஸ்லாம், முஸ்தபிஹூர் ரகுமான் தலா ஒரு




விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பங்களாதேஷ் அணி, இலங்கை வீரர்களின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 19.4 ஓவர்களில் 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால் இலங்கை அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ரிஷாத் ஹூசைன் 53 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணியில் நுவான் துஷாரா 5 விக்கெட்களும், அணித் தலைவர் ஹசரங்கா 2 விக்கெட்களும் எடுத்தனர்.

இலங்கை வீரர்கள் துஷாரா ஆட்டநாயகன் விருதையும், குசல் மெண்டிஸ் தொடர் நாயகன் விருதையும் தட்டிச்சென்றனர். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (ஐ)




# ஐ. பி. எல். தொடரில் ரிஷப் விளையாடுவார்!

## அறிவித்தது பி. சி. சி. ஐ.

புதுடெல்லி, மார்ச் 13

ரிஷப் பந்த் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தொடரில் பங்கேற்பார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ) அறிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ரிஷப் பந்த் 2022 டிசெம்பர் இறுதியில் பயங்கரமான கார் விபத்தில் சிக்கி படுகாயத்துடன் தப்பினார். தற்போது, பயிற்சியில் ஈடுபட்டு வரும் அவர் ஐ. பி. எல். தொடர் மூலம் கிரிக்கெட்டுக்கு வருகிறார்.

முன்னதாக, அவர் மீண்டும் கிரிக்கெட் விளையாடும் தகுதியை எட்டியுள்ளார் என்று மருத்துவ நிபுணர்கள் நடத்திய சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் ஜொகோவிச் அதிர்ச்சி தோல்வி!

கலிபோர்னியா,

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரரான ஜொகோவிச் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் இத்தாலியின் 20 வயது வீரரான லூகா நார்டி உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றில் 6-4 என்ற புள்ளிக்கணக்கில் ஜொகோவிச்சுக்கு அதிர்ச்சி அளித்த நார்டி அடுத்த சுற்றில் 3-6 என்ற செற் கணக்கில் வீழ்ந்தார். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் 6-3 என்ற செற் கணக்கில் 20 வயதான லூகா நார்டி முன்னணி வீரரான ஜொகோவிச்சை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)





# ரி - 20 உலகக் கிண்ண அணியில் ரிஷப்!

தர்மசாலா, மார்ச் 13

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியில் ரிஷப் பந்த் விளையாடுவார் என்று இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முகமது ஷமிக்கு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்து நாடு திரும்பி விட்டார். அவர் இப்போதைக்கு களம் திரும்ப வாய்ப்பில்லை. அவர், செப்ரெம்பரில் உள்ளூரில் நடக்கும் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட வாய்ப்புள்ளது.

காயத்தில் இருந்து தேறியுள்ள ரிஷப் பந்த் தற்போது நன்றாக துடுப்பெடுத்தாடுகிறார். விக்கெட் காப்பாளர் பணியையும் செய்கிறார். விரைவில் அவர் முழு உடல் தகுதியை எட்டி விடுவார். ஜூன் மாதம் நடக்கும் 20 ஓவர் உலகக் கிண்ணத்தில் கிரிக்கெட்டில் அவர் விளையாடினால் பெரிய பலமாக இருக்கும். அவர் இந்திய கிரிக்கெட்டின் மிகப்பெரிய சொத்து.

சிக்கலின்றி விக்கெட் காப்பாளர் பணியை அவர் தொடரும் பட்சத்தில், அவரால் 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் விளையாட முடியும். அதற்கு முன்னோட்டமாக ஐ. பி. எல். போட்டியில் அவர் எப்படி செயல்படுகிறார் என்பதை பார்க்கலாம் - என்றார். (ஐ)

# டெஸ்ட், ஒருநாள், ரி-20 போட்டிகள் தரவரிசையில் இந்தியா முதலிடம்!



டுபாய், மார்ச் 13

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ள தரவரிசை பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 போட்டிகள் என மூன்றிலும் முதலிடம் பிடித்துள்ளது.

அண்மையில், நடைபெற்று முடிந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 4-1 என்ற கணக்கில் வென்றது. இந்நிலையில் ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் இந்திய அணி 122 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்தது. அவுஸ்திரே லியா 117 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் இங்கிலாந்து அணி 111 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளன.

மேலும் இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசைப் பட்டியலிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் ஒருநாள், சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டிகள் தரவரிசை பட்டியலிலும் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது.

இதேநேரம், ஒருநாள் போட்டி தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி 121 புள்ளிகளுடன் முதலிடத்தை பெற்றுள்ளது. இதில், அவுஸ்திரேலிய அணி நெருக்கமாக 118 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. இதேபோன்று சர்வதேச இருபது -20 கிரிக்கெட் போட்டி தரவரிசையின் அணிப் பிரிவில் 266 புள்ளிகளுடன் முதலிடத்தில் இந்திய அணி உள்ளது. இதில் இங்கிலாந்து அணி 256 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. (ஐ)

# கனடா: ‘மிக மோசமான’ சூழலில் இந்திய மாணவர்கள்:
# அதிகரிக்கும் போதைப் பழக்கம், தற்கொலைகள்!

**சரப்ஜித் சிங் தலிவால்**

‘நான் இந்தியாவுக்குச் சென்று என் தந்தையைக் கட்டிப் பிடித்து அழ விரும்புகிறேன், எனக்கு அவர் அருகில் இருக்க வேண்டும் என ஏக்கமாக உள்ளது.”

இந்த வார்த்தைகளைச் சொன்னவுடனேயே அர்பன்-இன் கண்களில் கண்ணீர் வந்தது. பின் அவர் மௌனமாகி விட்டார். சில கணங்களில் அமைதியைக் கலைத்துவிட்டு, ‘இங்கே யாரும் யாருக்கும் சொந்தம் இல்லை, எல்லோரும் இங்கிருந்து ஓடிப் போகிறார்கள். கனடாவை பற்றி என்ன நினைத்திருந்தேனோ, இங்கே வந்த பிறகு அது தலைகீழாக மாறிவிட்டது,” என்று அவர் கூறினார்.

தனது கனவுகளை நனவாக்கும் நோக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மாணவியாக கனடா வந்தார் அர்பன். அர்பன் இந்தியாவின் பஞ்சாபின் முக்த்சார் மாவட்டத்தைச் சேர்ந்தவர், அவருடைய பெற்றோர் ஆசிரியர்கள்.

இரண்டு வருட படிப்பை முடித்த அர்பன், தற்போது பணி அனுமதி பெற்று ‘செக்யூரிட்டி’யாக பணியாற்றி வருகிறார். மேல்படிப்புக்காக கல்வி விசாவில் கனடாவுக்கு வரும் ஆயிரக்கணக்கான சர்வதேச மாணவர்களில் அர்பனும் ஒருவர். ஆனால், இங்குள்ள நிலைமைகள் அவர்களின் கனவுகளுக்கு மாறாக இருக்கிறது.

தன் சோகம் குறித்துப் பகிர்ந்துகொண்ட அர்பன், “நான் என் பெற்றோரை மிகவும் மிஸ் செய்கிறேன். அம்மா உணவு தயார் செய்வார். நான் விளையாடுவேன். அப்போது எனக்கு எந்தப் பொறுப்பும் இல்லை,” என்றார்.


“நீ சாப்பிட்டாயா மகளே, எனக் கேட்பதற்கு இங்கே யாரும் இல்லை. இங்கே நீங்கள்தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்,” என்கிறார் அவர்.

அர்பனின் கூற்றுப்படி, கனடாவுக்கு வரும் திட்டம் அவருக்கு இல்லை. உண்மையில், கனடா குறித்த பிரகாசமான காணொளிகளைப் பார்த்த பிறகே அவர் மிகவும் ஈர்க்கப்பட்டார். கனடா மிகவும் சுத்தமானது, மாணவர்களுக்குப் பெரிய கார்கள் மற்றும் வீடுகள் உள்ளன. மேலும் இந்த நாடு பெண்களுக்குப் பாதுகாப்பானது என, பஞ்சாபில் எல்லோரும் கனடாவை பற்றிப் பேசுவதை அர்பன் கவனித்தார்.

இளம் வயதில் இருக்கும் அர்பன் இதனால் மூலம் தான் மிகவும் கவரப்பட்டதாகவும், கனடாவுக்கு செல்ல முயல வேண்டும் என்று நினைத்ததாகவும் கூறுகிறார். “நான் எனது பட்டப்படிப்பை முடிக்க வேண்டும் என்று என் பெற்றோர் விரும்பினர். ஆனால், நீங்கள் எவ்வளவு சீக்கிரம் கனடா செல்கிறீர்களோ, அவ்வளவு சீக்கிரம் செட்டில் ஆகிவிடுவீர்கள் என சிலர் என்னிடம் சொன்னார்கள்.”

அர்பனுக்கு 24 வயது ஆகிறது. அவர் சுமார் 3 ஆண்டுகளுக்கு முன் கனடா சென்றார்.

“எனவே, நான் 12ஆம் வகுப்பு முடித்தவுடனே மிக இளம் வயதிலேயே இங்கு வந்தேன். கனடாவில் வசிக்கும் நண்பர்கள் சிலர் இங்குள்ள பிரச்னைகளை என்னிடம் சொன்னாலும் கனடா என்ற பேய் என் மனதில் இருந்ததால் அவர்கள் சொன்னதை நான் பொருட்படுத்தவில்லை.”




**கனடா குறித்த கனவும் உண்மை நிலவரமும்**

கனடாவுக்கு 2021இல் முதன்முறையாக வந்தபோது, தான் நினைத்துப் பார்க்காத வேறொரு உலகத்திற்கு வந்திருப்பது போன்று உணர்ந்ததாகவும் டொரண்டோ தனது கனவுகளின் நகரமாகத் தோன்றியது என்றும் அர்பன் கூறுகிறார்.



“ஏஜெண்ட்டுக்கு அறிமுகமான நபர் ஒருவர் என்னை விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்று ஒரு வீட்டின் கீழ்தளத்தில் தங்குவதற்கு வாடகைக்கு எடுத்தார், அங்கு நான் ஏழு மாதங்கள் தங்கினேன்,” என்று அர்பன் கூறினார்.

“அந்த இடம் ஒரு மண்டபம் போன்று இருந்தது, அங்கு அறைகள் இல்லை, தரையில் வெறும் மெத்தைகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. வேறு சில பெண்களும் அங்கு தங்கியிருந்தனர். ஜன்னல்கள் இல்லை, முதல் ஏழு மாதங்கள் கனடாவில் எனது அனுபவம் மிகவும் மோசமாக இருந்தது.”



கனடாவை பற்றி இந்திய குழந்தைகளுக்குக் காட்டப்படுவது வெறும் கனவுதான் என்கிறார் அர்பன். யதார்த்தம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இத்தகைய ஓரிடத்தில் வசிக்க வேண்டும் என முகவர்கள் சொல்லவில்லை.

படித்துக்கொண்டே எப்படி வேலை செய்ய வேண்டும், மாணவர்களிடம் எவ்வளவு சுரண்டப்படும் என்பது குறித்தெல்லாம் சொல்லவில்லை. இது பற்றி எந்தத் தகவலும் கொடுக்கப்படவில்லை. கனடாவை பற்றி எல்லாமே நன்றாகத்தான் சொல்லப்படுகிறது.

அர்பன் கூறுகையில், மாணவர்களின் வாழ்க்கை மிகவும் சிரமமானது. மன உளைச்சல், குடும்பத்தை விட்டு விலகியிருப்பது, வேலை கிடைக்காததால் ஏற்படும் அழுத்தம், இவை அனைத்தும் மாணவர் வாழ்க்கையின் போராட்டத்தின் ஒரு பகுதி.

தற்போது வேலைதான் பெரிய பிரச்னை என்று அர்பன் கூறினார். குளிர்காலத்தில் நடைபெறும் வேலைவாய்ப்பு கண்காட்சிகளில், மாணவர்கள் நீண்ட வரிசையில் நின்று வேலை தேடுகிறார்கள்.

இந்த மாணவர்களில் சிலருக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது, இந்தியாவில் கனடாவை பற்றி யாரும் இந்த உண்மையைச் சொல்வதில்லை. வாழ்க்கைச் செலவுகள், கல்லூரிக் கட்டணம், வேலை உறுதி இல்லாமை போன்றவற்றால் மனதில் எப்போதுமே மாணவர்களுக்குக் கவலை இருக்கும்.

என்னுடைய படிப்பை முடித்தது, வேலை கிடைத்தது, சம்பளம் வங்கிக் கணக்கில் வந்துவிட்டது என்பது போன்ற சில தகவல்களையே பெற்றோரிடம் தெரிவிப்பதாக அர்பன் கூறினார். மற்ற சிரமங்களை ஏன் சொல்லவில்லை என்று கேட்டால், அவர்கள் கவலைப்படுவார்கள், பெரும்பாலான மாணவர்கள் இப்படித்தான் செய்வார்கள் என்று அவர் கூறினார்.

“நான் சாப்பிடாவிட்டாலும், நான் சாப்பிட்டதாக என் பெற்றோரிடம் பொய் சொல்கிறேன். நான் வேலையிலிருந்து தாமதமாக வந்ததால் இன்று சமைக்க முடியவில்லை என்று என்னால் சொல்ல முடியாது.”

சுமார் 24 வயதான அர்பன், தனக்குள் இருந்த குழந்தைமையை இளம் வயதிலேயே இழந்துவிட்டதாகவும் கனடாவில் தான் பெரிய பொறுப்புகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தார். கனடா குடியுரிமை பெறுவதைத் தன் நோக்கமாகக் கொண்டுள்ளார் அர்பன். அதன் பிறகுதான் இந்தியா சென்று தன் பெற்றோருடன் இணையத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறுகிறார் அவர்.

அர்பனின் கூற்றுப்படி, கனடா ஒரு நல்ல நாடு, யாருக்கும் எந்தப் பாகுபாடும் இல்லை, முன்னேற சம வாய்ப்புகள் உள்ளன. ஆனால் மாணவர் வாழ்க்கை மிகவும் கடினம், இந்தியாவில் வாழும்போது அதைக் கற்பனை செய்து பார்க்க முடியாது என்றார்.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தின் 2023 தரவுகளின்படி, இந்த ஆண்டு சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை 29 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், அதிகமான இந்திய மாணவர்கள் கல்வி கற்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, சீன மாணவர்கள் இரண்டாவது இடத்திலும் பிலிப்பைன்ஸ் மாணவர்கள் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இந்திய மாணவர்களில், பஞ்சாப் மற்றும் குஜராத்தில் இருந்து அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் கனடா செல்கின்றனர். இது தவிர, ராஜஸ்தான், உத்தர பிரதேசம், தெலங்கானா, ஆந்திரா, ஹரியாணா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் தற்போது கனடாவில் படித்து வருகின்றனர். இந்தியர்களில், கனடா செல்லும் மாணவர்களில் பஞ்சாபை சேர்ந்தவர்களே அதிகம்.

லட்சக்கணக்கான இந்திய மாணவர்கள் பல ஆண்டுகளாக சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்த்து கனடா சென்றுள்ளனர். கிரேட்டர் டொரண்டோ ஏரியா

(16ம் பக்கம் பார்க்க)

# கனடா விசிட் வீசா பரிதாபங்கள்!




போனவருடம் கனடா 'விசிட் விசா" பற்றிய பதிவுகள் வைரலானது. ஒரு பெரிய கூட்டம் அதில் ஏமாந்து கோடிகள் செலவழித்து கனடாவுக்கு படையெடுத்தது.

இப்போது நாடகம் முடியும் நேரம். அப்படி கோடிகள் செலவழித்த பலர் நாட்டுக்குத் திரும்பி வரத் தொடங்கியுள்ளார்கள்.

இது ஒன்றும் அறியாமையில் நடந்த ஏமாற்று வேலை இல்லை. பலர் இந்த ஏமாற்று வைரல் போஸ்ட்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி இருந்தும், தெரிந்தே ஏமாந்தவர்கள் அவர்கள்.

சரி இந்த விசிட் விசா ஏமாற்று எப்படி நடந்தது? எப்படி பெரிய படிப்பு படிச்சு நல்ல வேலையில், நல்ல நிலையில் இருந்தவர்கள்கூட ஏமாந்தார்கள்?

ஒவ்வொரு நாட்டுக்கும் வேறு ஒரு நாட்டில் இருந்து செல்ல பல விதமான விசாக்கள் உள்ளன.

**உதாரணத்திற்கு சில,**

**1. விசிட் விசா- டூரிஸ்ட் விசா:**

இது குறுகிய காலத்திற்கு ஒரு நாட்டுக்கு செல்வதற்கான விசா. அதாவது சுற்றுலா, உறவினரின் சாமத்திய வீடு போன்ற விடயங்களுக்கு ஒரு நாட்டுக்கு செல்ல இந்த விசா கொடுப்பார்கள்.

**2. வேலை விசா:**

இது அந்த நாட்டில் போய் வேலை செய்பவர்களுக்கு கொடுக்கப்படும் விசா.

வேலை விசாவுக்கு விண்ணப்பிக்க அந்த நாட்டில் உள்ள ஒரு நிறுவனம் உங்களுக்கு என்ன வேலை தருகிறது, எவ்வளவு சம்பளம், எத்தனை வருடத்திற்கு வேலை என முழு விபரத்தோடு உங்களை ஸ்பொன்சர் பண்ணும் சேர்டிபிக்கேட் தர வேண்டும்.

அந்த சேர்ட்டிபிக்கட் இருந்தால், பாஸ்போர்ட் உட்பட மிகச்சில ஆவணங்களோடு இலகுவாக விசாவுக்கு விண்ணப்பிக்கலாம்.

விசிட் விசாவுக்கு அப்ளை பண்ணுவதும் அப்படி பெரிய சிக்கல் இல்லை.

விசிட் விசா அப்ளை பண்ணும்போது எம்பசி சில விடயங்களைக் கவனிக்கும்,

1. உங்களிடம் அந்த நாட்டுக்கு சென்று திரும்பி வரும்வரை சமாளிக்கும் பொருளாதார வசதி உள்ளதா?

2. குறிப்பிட்ட விசிட் விசா முடிந்ததும் நாட்டுக்கு நீங்க திரும்பி வருவதற்கான காரணம் உள்ளதா?

> **முகநூல் ஒன்றில் யார் எழுதியது என்ற தகவல்கூட இல்லாமல் ஒரு வாசகர் அனுப்பிவைத்த கட்டுரை இது. நமது வாசகர்களுக்கு பயனுள்ள பல தகவல்கள் இருந்ததால், அதனை இங்கெ பிரசுரம் செள்திருக்கிறோம். (ஆ-ர்)**

இரண்டையும் நிரூபித்தால் இலகுவாக விசா கிடைக்கும்.

அதற்காக நீங்கள் எம்பசியை ஈசியாக ஏமாற்ற முடியாது. திடீரென வட்டிக்கு கடன் வாங்கி ஐம்பது லட்சத்தை வங்கியில் போட்டுவிட்டு என்னிடம் பணம் இருக்கு என்று காட்டினால் விசாவை நிராகரித்து விடுவான்.

இந்த விசிட் விசா அப்ளை பண்ண அந்த நாட்டில் வசிக்கும் உறவினர்களின் கடிதம் தேவையில்லை. நீங்கள் எந்த நாட்டுக்கு விசிட் விசாவில் போவதற்கும் அங்கே உங்களுக்கு தெரிந்தவர்கள் இருக்க வேண்டும் என்ற தேவையே இல்லை.

ஒரு ஹொட்டலை புக் பண்ணி, அந்த ஹொட்டலில் நிற்கப்போகிறேன் என்று அப்ளை பண்ணினாலே போதும். வழமையாக நிறையப்பேர் செய்வது என்னவென்றால், ஒரு ஹொட்டலை புக் பண்ணி அதைக்காட்டி விசா எடுத்துவிட்டு விசா வந்ததும் ஹொட்டல் புக்கிங்கை கேன்சல் பண்ணி காசை திரும்ப எடுத்துவிட்டு, தெரிந்த ஆட்கள் வீட்டில் போய் தங்குவார்கள்.

நாட்டுக்கு நீங்க திரும்பி வருவதை எப்படி எம்பசியை நம்ப வைக்கலாம்?

உங்களுக்கு நாட்டில் இருக்கும் சொத்து, உங்கள் குடும்பம் நாட்டில் இருப்பது, உங்களுக்கு நாட்டில் நிரந்தர வேலை இருப்பது போன்றவை மூலம் எம்பசியை நம்ப வைக்கலாம்.

மிக முக்கியமான விடயம், இந்த விசாக்களை அப்ளை பண்ணிப் பெற நீங்கள் தரகர்கள் யாருக்குமே பணம் கொடுக்க வேண்டியதில்லை. விசாவுக்கான கட்டணம் ஒன்று தொடக்கம் இரண்டு லட்சத்துக்குள் வரும். அந்தப் பணத்தை எம்பசிக்கு கொடுத்து நீங்களே இலகுவாக அப்ளை பண்ணலாம். ஆங்கிலம் தெரியாதவர்கள் மட்டும் ஆங்கிலம் தெரிந்த யாரிடமாவது உதவி பெற வேண்டி வரும்.




சரி இந்த விசிட் விசா ஏன் திடீரென வைரலாகி ஈழத் தமிழனை முட்டாள் ஆக்கியது ?

வழமையாக நீங்கள் ஒரு நாட்டுக்கு விசிட் விசாவில் போனால் சுற்றி பார்த்து விட்டு விசா முடிய உங்கள் நாட்டுக்குத் திரும்ப வேண்டும். அந்த நாட்டில் வேலை செய்ய முடியாது. தப்பித் தவறி உங்களுக்கு அந்த நாட்டில் வேலை கிடைத்து, ஸ்பொன்சர் சேர்ட்டிபிக்கட் கிடைத்தால் கூட நீங்கள் இலங்கைக்கு திரும்பிப் போய், வேலை விசாவுக்கு புதிதாக அப்ளை பண்ண வேண்டும்.

இதுதான் வழமையான நடைமுறை. கொரோனா காலத்தில் விமான பயணக் கட்டுப்பாடு வந்ததால், பல நாடுகள் இந்தத் தடையை நீக்கி, நீங்கள் விசிட் விசாவில் சென்ற பின்பு வேலை கிடைத்தால், சொந்த நாட்டுக்கு திரும்பாமலே வேலை விசாவுக்கு அப்ளை பண்ணலாம் என்ற வசதியை ஏற்படுத்தின.

நன்றாக கவனிக்க, நீங்கள் விசிட் விசாவில் போய் அங்கே வேலை செய்து செட்டில் ஆகலாம் என சட்டம் மாறவில்லை. விசிட் விசாவில் சென்ற பின் வேலை கிடைத்து ஸ்பொன்சர் சேர்ட்டிபிக்கட் கிடைத்தால் நாட்டுக்கு திரும்பாமல் புதிய விசாவுக்கு அப்ளை பண்ணலாம் என்று சட்டத்தை கொஞ்சம் தளர்த்தினார்கள். அவ்வளவுதான்!

கொரோனா முடிந்ததும் பல நாடுகள் பழையபடி, நீங்கள் வேலை விசாவில் வருவதென்றால் உங்கள் நாட்டுக்குத் திரும்பி புதிய விசா பெற்று வரவேண்டும் என அறிவித்தன.

கனடா மட்டும் அந்த சட்டத்தை மீளப் பெறாமல், கொரோனா காலம் போல நீங்கள் நாட்டுக்கு திரும்பாமல் கனடாவில் இருந்தபடியே வேலை விசாவுக்கு அப்ளை பண்ணுவதை தொடரலாம் என அறிவித்தது.

அதை அரை குறையாகப் புரிந்து கொண்டவர்கள் சிலர், கனடாவுக்கு விசிட் விசாவில் போனால் ஈசியா செட்டில் ஆகலாம் என கதையை கட்டிவிட நம்மட ஆட்களும் அதை நம்பி வைரல் ஆக்கி விட்டார்கள்.

அதைச் சாதமாகப் பயன் படுத்திய புரோக்கர்மார் ஒரு கோடி தந்தால் விசிட் விசா எடுத்து தருவம், நீங்க கனடா போய் செட்டில் ஆகலாம் என ஏமாற்றத் தொடங்கினார்கள்.

உடனே நம்மட அறிவாளிகளும் இருந்த நல்ல வேலைகளையும் விட்டுப் போட்டு கோடிகள் கொடுத்து விசிட் விசா எடுத்து கனடாக்கு ஓடினார்கள்.

அந்த ஒரு கோடிக்கு புரோக்கர் செய்த வேலை என்ன தெரியுமா?

ஒரு விசா விண்ணப்பப் படிவத்தை உங்களுக்காக நிரப்பியது. அதாவது ஒரு விண்ணப்பப்படிவம் நிரப்ப ஒரு கோடி கொடுக்கும் ஆட்களை வேறு எங்கேயாவது பார்க்க முடியுமா?

நல்ல வேலை, இலங்கையில் சொத்துக்கள் போன்றவை காரணமாக அவர்களுக்கு இலகுவாக விசிட் விசாவும் கிடைத்துவிட, சந்தோசமாக கனடாவுக்கு போய் இறங்கிய பின்புதான் அவர்களுக்கு நாங்கள் வந்திருப்பது ஊர் சுத்தி பார்க்கும் விசா இதை வச்சு இங்கே வேலை செய்ய முடியாது என உறைத்தது. அங்கே வேலை செய்ய வேண்டும் என்றால், ஏதாவது கம்பனி வேலை கொடுத்து ஸ்பொன்சர் பண்ண வேண்டும். அது அவ்வளவு இலகுவானதல்ல.

அப்படி ஒரு வேலை ஆறு மாதத்துக்குள் கிடைக்க வேண்டும். அப்படி கிடைக்காது விட்டால் ஆறு மாதம் முடிய முன்பு நாட்டுக்கு திரும்ப வேண்டும்.

அல்லது அகதி அந்தஸ்த்து கோரி அலைய வேண்டும்.

இலங்கையில் கௌரவமாக, நல்ல சம்பளத்தோடு வாழ்ந்த நிறையப்பேர் ஒரு விண்ணப்பப்படிவத்தை நிரப்ப ஒரு கோடி கொடுத்து எல்லா சொத்துக்களையும், இலங்கையில் வேலையையும் இழந்து கனடாவிலும் வேலை கிடைக்காமல் நடுத்தெருவில் அலைந்துகொண்டு திரிகிறார்கள்.

சிலர் போனது போகட்டும் என புத்திசாலி தனமாக நாட்டுக்கு திரும்பி வாழ்க்கையை மீள ஆரம்பிக்கிறார்கள்.

இந்த ஏமாற்று வேலைகூட பரவாயில்லை, பணத்தை இழப்பதோடு போகிறது.

திருட்டு தோணியில் போய் உயிரிழந்த ஆட்கள் சிலரின் வாழ்க்கையைப் பார்க்கும் போது, கவலையாக இருக்கும். நல்ல வேலையில், இலங்கையில் வீடு வாசலோடு வசதியாக இருந்த பலர் ரோமானிய காட்டுக்குள்ளும், நடுக்கடலிலும் உயிர் இழந்துள்ளார்கள். அவர்களின் வசதிக்கு அவர்கள் இலகுவாக சுற்றுலா விசா பெற்று இருக்கலாம். புரோக்கர் மார் அதை சொல்லாமல் ஐம்பது லட்சம், ஒரு கோடி என வாங்கி உயிரை பறிக்கிறார்கள்.

தயவுசெய்து , இப்படி புரோக்கர்கள் எழுதும் பதிவுகளை வைரல் ஆக்கி சனத்தை முட்டாள் ஆக்க உதவாதீர்கள்.

# கனடா: "மிக மோசமான" சூழலில் இந்திய மாணவர்கள்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

(ஜிடிஏ) சர்வதேச மாணவர்களுக்கு, குறிப்பாக இந்தியர்களுக்கான மையமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, பிராம்ப்டன் ஹமினி பஞ்சாப்ஹ என்று அழைக்கப்படுகிறது.

பஞ்சாபின் பர்னாலா மாவட்டத்தில் உள்ள துல்கோட் கிராமத்தைச் சேர்ந்த அக்ரமின் கதையும் அர்பனை போன்றது. 28 வயதான அக்ரம், 2023ஆம் ஆண்டு கல்வி அனுமதியின் பேரில் கனடாவுக்கு வந்து, தற்போது பிராம்ப்டனில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் திட்ட மேலாண்மை படித்து வருகிறார்.

தனது வகுப்பில் 32 மாணவர்கள் இருப்பதாக அக்ரம் கூறினார். இவர்களில் 25 பேர் இந்தியர்கள், மீதமுள்ளவர்கள் பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள். அவரது வகுப்பில் கனடா வம்சாவளி மாணவர்கள் இல்லை.

கனடா வாழ்க்கையை பற்றிய தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட அக்ரம், "கனடா ஒரு அழகான சிறை, நீங்கள் எல்லாவற்றையும் பெறுவீர்கள், ஆனால் உங்கள் வாழ்நாள் முழுவதும் அதிலிருந்து உங்களால் வெளியேற முடியாது," என்று கூறுகிறார்.

அக்ரம் கூறுகையில், "தற்போது இங்கு எந்திரங்கள் போல் இருக்கிறோம், காலை முதல் மாலை வரை உழைக்கிறோம், சிலந்தி வலையில் இருந்து வெளியே வரமுடியாது," என்றார். அக்ரமின் கல்லூரி வாரத்தில் மூன்று நாட்கள் மாலை இரண்டு மணிநேரம் நடைபெறுகிறது.

கூலித் தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்த அக்ரம் ரூ.22 லட்சம் கடனுடன் கனடா வந்துள்ளார். இந்த கடனைத் திருப்பிச் செலுத்துவதோடு, அவரது கனவுகளையும் நிறைவேற்ற, அவர் இரண்டு பணிநேரங்களில் கடுமையாக உழைக்க வேண்டும்.



அவரைப் பொறுத்தவரை, இந்தியாவில் கனடா குறித்து சொல்லப்படுவது முழு உண்மை இல்லை என்பதை அந்நாட்டுக்கு சென்றவுடன் அவர் அறிந்தார். அக்ரம் திறமையான, இலக்கியத்தில் ஆர்வமுடைய இளைஞர். பஞ்சாபிலேயே இலக்கியம் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்றார் அக்ரம்.

கனடா வந்த பிறகு அவருடைய கவிதைகளின் எழுத்துகள் மாறிவிட்டன. அக்ரமின் கவிதைகள் பஞ்சாப் நிலத்தின் மீதான அவரது ஏக்கத்தையும் கனடாவின் கடினமான சூழ்நிலைகளையும் பிரதிபலிக்கின்றன.

செலவுகளைச் சமாளிக்க எல்லா நேரமும் வேலை செய்வதும், எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் பொதுவாக அவர்களின் முகங்களிலும் வார்த்தைகளிலும் பிரதிபலிக்கின்றன.

கடனைத் திருப்பிச் செலுத்துதல், கல்லூரிக் கட்டணம், வாழ்க்கைச் செலவுகளைச் சந்திக்க, அக்ரம் தற்போது இரண்டு இடங்களில் பகுதிநேர வேலை செய்கிறார். பகலில் கணினி மையத்திலும், இரவில் செக்யூரிட்டியாகவும் பணிபுரிகிறார். அவர் ஐந்து மணிநேரம் மட்டுமே தூங்குகிறார்.

அக்ரம் கூறுகையில், "ஒருபோதும் பதற்றம் குறையாது, குடும்ப உறுப்பினர்களிடம் பேசுவது மன அழுத்தத்தில் இருந்து எனக்கு கொஞ்சம் நிவாரணம் அளிக்கிறது" என்றார்.

அக்ரம், அர்பனை போலவே, கனடாவில் உள்ள பிரச்னைகள் பற்றி எதையும் பெற்றோரிடம் பகிர்ந்து கொள்வதில்லை. அக்ரம் தற்போது தனது ஐந்து நண்பர்களுடன் கீழ்தளத்தில் வாடகைக்கு வசிக்கிறார். ஹல்லுன்மா கீழ்தளத்தில் இரண்டு படுக்கைகளும் தரையில் சில படுக்கை விரிப்புகளும் உள்ளன.

### கனடாவில் மாணவர்கள் மரணம்

சர்வதேச மாணவர் சமூகத்தில் உள்ள அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் இன்னொரு விஷயம் கனடாவில் நிகழும் மாணவர்களின் மரணம். இதுகுறித்து அறிய பிராம்ப்டனில் இறுதிச் சடங்கு நடத்துவதற்கான தனியார் அமைப்பின் மேலாளர் ஹர்மிந்தர் ஹன்சியிடம் பேசியனோம். அவர் 15 ஆண்டுகளாக அந்த அமைப்பை நடத்தி வருகிறார்.

சர்வதேச மாணவர்களின் இறப்பு விகிதம் சமீப காலமாக கணிசமாக அதிகரித்துள்ளது என்று ஹர்மிந்தர் ஹன்சி கூறினார்.

இறப்புக்கான காரணங்களை பற்றிப் பேசுகையில், பெரும்பாலான இறப்புகளில், இயற்கை காரணங்களால் இறப்பது ஒன்றிரண்டு நிகழ்வுகள்தான் என்றும் பெரும்பாலான இறப்புகளுக்குக் காரணம் தற்கொலைதான் என்றும் ஹர்மிந்தர் ஹன்சி தெரிவித்தார்.

இதுமட்டுமின்றி, போதைப்பொருளை அதிகமாக உட்கொள்வதாலும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் விபத்துகளும் சர்வதேச மாணவர்களிடையே மரணத்தை ஏற்படுத்துகின்றன.

ஒவ்வொரு மாதமும் சுமார் நான்கு-ஐந்து இறந்த உடல்களை அவர்கள் இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். இதுதவிர சிலர் கனடாவிலும் அவற்றைத் தகனம் செய்கிறார்கள், அதன் தரவு கிடைக்கவில்லை என்று ஹன்சி கூறினார். ஹன்சியின் கூற்றுப்படி, தற்போது கிரேட்டர் டொரண்டோ ஏரியாவில் இத்தகைய அமைப்புகள் பல உள்ளன. கனடா முழுவதிலும் உள்ள தரவுகளை ஒருங்கிணைத்தால் இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்றார்.

